# கல்வெட்டு



18279

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் காலாண்டு இதழ்

இதழ் 20 ★ ரக்தாட்சி ஆண்டு ஆனித் திங்கள் ★ விலை ரூ. 1-50

# முன்னுரை

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை சென்ற சில ஆண்டுகளாகக் 'கல்வெட்டு' என்னும் காலாண்டு இதழை வெளியிட்டு வருகிறது. இதில் இத்துறையின் புதிய கண்டுபிடிப்புகளும், சிறப்பு நிகழ்ச்சிகளும், அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகளும் வெளியிடப்படுகிறது. ஆராய்ச்சியார்வம் உள்ள மாணவர்களும், வரலாற்றார்வம் கொண்டோரும் இவ்விதழைப் படித்துப் பயன்பெற்று வருகின்றனர்.

குறிப்பிட்ட பருவத்தில் இவ்விதழை அச்சிட்டு வெளியிடுவது சிரமமாக இருந்து வந்தது. ஆதலால் இதழ் வெளியிடப்பெறும் நாளுக்கும், அது வெளி வந்ததாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் நாளுக்கும் பெரும் வேறுபாடு காணப் பெறும். அவ்வேற்றுமையைக் களைய எந்த நாளில் இதழ் வெளியிடப் படுகிறதோ அந்த நாளையே இதழிலும் குறிப்பிட முடிவு செய்துள்ளோம். இடைப்பட்ட காலத்தில் இதழ் வெளிவராமல் இருந்தமைக்கு வாசகர்கள் பொறுத்தருள வேண்டுமாய்ப் பணிவுடன் வேண்டிக்கொள்கிறேன்.

அன்பன்,

**நடன. காசிநாதன்**
இயக்குநர் (பொறுப்பு)

உள்ளே........


1 வளையலின் தொன்மை —து. துளசிராமன்... 1

2 முற்காலப் பாண்டியர், சேரர் வரலாற்றில் புதிய ஒளி —வெ. வேதாசலம்... 6

3 கானாடு காத்தான் பெரிய கோயில் —மா. சந்திரமூர்த்தி... 11

4 துறவிருந்து இறந்தார் கல் —நடன. காசிநாதன்... 16

5 நெற்குப்பைச் செப்பேடு —மா. செந்தில் செல்வகுமரன்... 20

6 கோச்செங்கணானின் மாடக் கோயில்கள் —இரா. கலைக்கோவன்... 23

7 சுதைப் பொருட்களைச் சுத்தம் செய்யும் முறை —பி. ரவிசங்கர்... 28

8 வரலாற்றுக் காலத்து முந்தைய ஓவியங்கள் —சி. வசந்தி... 30

9 இடையார்ப் பாக்கம் —கி. ஸ்ரீதரன்... 33

10 துறையின் சிறப்பு நிகழ்ச்சிகள் ... 35


---

அட்டைப்படம்

" துறவிருந்து இறந்தார் கல் "

இதன் விளக்கத்தை 16-ஆம் பக்கத்தில் காண்க

# வளையலின் தொன்மை

து. துளசிராமன், எம்.ஏ.,
அகழ்வாய்வாளர்
தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை

ஐந்து வகை மங்கலப் பொருட்களில் வளையலும் ஒன்றாகக் கருதப் படுகிறது. தற்போது எளியவர் முதல் செல்வந்தர் வரை அனைத்துப் பெண்களும் தம் கைகளில் வளையல்கள் அணிகின்றனர்.

வட இந்தியாவில் மொகஞ்சதாரோவில் கிடைத்த புகழ்பெற்ற நடன மகளின் வலது கையின் தோள்முதல் முன்கை வரை வளையல்கள் காணப் படுவது இதன் தொன்மையை உணர்த்தும். இங்கு நடைபெற்ற அகழ் வாய்வுகளில் பொன், தந்தம், எலும்பு, சங்கு, சுடுமண் ஆகியவற்றாலான வளையல் துண்டுகள் அதிக அளவில் கிடைத்திருப்பதைக் கொண்டு இன்றைக்கு 4000 ஆண்டுகளுக்கு முன் இங்கு வாழ்ந்த மக்கள் வளையல்களைப் பெருமள விற்கு அணிந்திருந்தனர் என்பது தெரிகிறது. மேலும் பார்கூத், சாஞ்சி, மதுரா, அமராவதி, நாகார்ச்சுனகொண்டா ஆகிய இடங்களில் கிடைத்த பழமையான பெண் சிற்பங்கள் அனைத்தும் தம் கைகளில் அணிந்திருப்பதைக் கொண்டு அக்கால மக்கள் வளையல்கள் அணிவதற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தனர் என்பது நன்கு விளங்கும்.

தமிழகத்தில் பெருங்கற்காலம் முதல் வளையல் அணியும் வழக்கம் இருந்துள்ளது. ஆதிச்சநல்லூர், பையம்பள்ளி, பெரும்பேர், கோவலன் பொட்டல் ஆகிய இடங்களில் உள்ள பெருங்கற்சின்னங்களில் நடைபெற்ற அகழ்வாய்வுகளில் சங்கு மற்றும் சுடுமண்ணாலான வளையல் துண்டுகள் கிடைத்திருப்பதைக் கொண்டு இக்கால மக்கள் பெரும்பாலும் சங்கு, சுடுமண் ஆகியவற்றாலான வளையல்களையே அணிந்திருந்தனர் எனத் தெரிகிறது.

**சங்க காலம்**

சங்ககால மகளிர் அனைவரும் தம் கைகளில் வளையல்கள் அணிந் திருந்தார்கள். சங்க இலக்கியங்கள் வளையல்களை 'வளை' அல்லது 'தொடி' என அழைக்கின்றன. சங்குக்குத் தமிழ்ப் பெயர் 'வளை' என்பது. தமிழகத்தின் மூன்று பக்கமும் கடல் சூழ்ந்திருப்பதால் கடலில் மூழ்கிச் சங்கு எடுக்கும் தொழில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இச் சங்குகளை வளைகளாக அறுத்து வளையல் செய்யும் தொழிலும் சிறப்புற்றிருந்தது. சங்குகளில் இடம்புரிச் சங்கு என்றும், வலம்புரிச் சங்கு என்றும் இருவகை உண்டு. வலம்புரிச் சங்கு கிடைப்பது அரிது. எனவே வலம்புரிச் சங்குக்கு விலை அதிகம். சங்கு புனிதமானது. எனவே அரண்மனையில் வாழ்ந்த அரச மகளிர் முதல் குடில்களில் வாழ்ந்த ஏழைகள் வரை அனைவரும் சங்கு வளைகளை அணிந்தார்கள். இடம்புரிச்

சங்கினால் செய்த வளையல்களைச் சாதாரண பெண்களும், விலையுயர்ந்த வலம்புரிச் சங்கினால் செய்த வளையல்களோடு பொன்னாலான வளையல்களை அரச மகளிரும், வணிகர் போன்ற செல்வ மகளிரும் அணிந்தனர்.[1]

கொற்கைக் கடலில் சங்குகள் மிக அதிகமாகக் கிடைத்தன. கொற்கையில் நடைபெற்ற அகழ்வாய்வில் நூற்றுக்கணக்கான சங்குகளும், வளையல்கள் அறுத்தது போக, எஞ்சிய சங்குப் பகுதிகளும், சங்கு வளையல் துண்டுகளும் மிக அதிக அளவில் கிடைத்தன. எனவே கொற்கை, சங்க காலத்தில் சங்கு வளையல்கள் செய்யும் உற்பத்திக் கூடமாக விளங்கியது எனலாம். சங்குகளை அக்காலத்தில் சிறு அரம் கொண்டு அறுத்து அழகான வளையல் செய்தார்கள்.[2] தமிழகத்தில் அரிக்கமேடு, வசவசமுத்திரம், காஞ்சீபுரம், கொற்கை, உறையூர், காவிரிப்பூம்பட்டினம், கரூர், அலகரை, திருக்காம்புலியூர் போன்ற இடங்களில் நடைபெற்ற அகழ்வாய்வுகளில் சங்ககால மண் அடுக்குகளில் சங்கு வளையல் துண்டுகளும், அறுத்த சங்குத் தொகுதிகளும் மிகுதியாகக் கிடைத்துள்ளன. இந்த சங்கு வளையல் துண்டுகளின் மேற்பகுதியில் கூர்மையான அரம் கொண்டு வரையப்பட்ட நேர்கோடுகள், நாற்கரம், முக்கோணம், செங்கோணம், குறுக்குவெட்டுக் கோடுகள் போன்ற அலங்கார கோடுகள் காணப்படுகின்றன. சில வளையல் துண்டுகள் ஒருபுறம் தட்டையும், ஒருபுறம் உட்குழியும் கொண்ட வெட்டு அமைப்பும்[3] சில வளையல் துண்டுகள் ஒரு புறம் தட்டையும் ஒரு புறம் மேற்குவியும் கொண்ட செதுக்கு அமைப்பும்[4] கொண்டு காணப்படுகின்றன. இத்தகைய செதுக்கு அமைப்புகளின்மீது பொன் தகடுகள் பதிக்கப்பட்டிருந்தன. திருக்காம்புலியூரில் கிடைத்த சில சங்கு வளையல் துண்டுகளின் மேற்பகுதியில் செங்காவி வண்ணம் தீட்டப் பட்டிருந்தது. இச்சங்கு வளையல் துண்டுகள் செங்கோணம், குவிசெதுக்கு அமைப்பு, பள்ளம் போன்ற வடிவம் ஆகிய குறுக்கு வெட்டு தோற்றங்களுடன் காணப்பட்டன.[5]

அக்காலத்தில் சங்குகளை வளையல்களாக அறுத்துத் தொழில் செய்தவர்களுக்கு வேளாப் பார்ப்பான் என்று பெயர்.[6] வேளாப் பார்ப்பான் என்பதன் பொருள் வேள்வி செய்யாத பார்ப்பான் என்பது. அதாவது விசுவப் பிராமணர் என்பதாம்.[7] அக்காலத்தில் முக்கியமான நகரங்களில் சங்கு அறுக்கும் தொழில் சிறப்பாக நடந்தது. காவிரிப்பூம்பட்டினத்தில் ஒரு வீதியில் சங்குகளை வளையல்களாக அறுக்கும் தொழில் நடந்தது குறித்துச் சிலப்பதிகாரம் கூறுகிறது.

சங்ககால மகளிர் சங்கு வளையல்களை ஆய்ந்து[8] அணிந்து அழகு பெற்றனர். அழகான[9] ஒளிபொருந்திய[10] வெண்மையான[11] சங்கு வளையல்களை வரிசையாகவும்[12] ஒழுங்காகவும், நிறைவாகவும் அணிந்தனர். சிலர் கை நிறையவும், சிலர் கொஞ்சமாகவும் வளைகள் அணிந்தனர். கையோடு பொருந்திய குறுந்தொடிகளையும்[13], அகன்ற அகல்தொடிகளையும்[14] கழன்று கீழே விழுவது போன்ற அவிழ்தொடிகளையும்[15] பொன்னாலான பொற்தொடிகளையும்[16] பூந்தொடிகளையும், ஆம்பல் வள்ளித்தொடிகளையும்[17]

பாம்பு போன்ற வளைவுகள் உடைய பாம்புத்தொடிகளையும்[18] சங்க கால மகளிர் விரும்பி அணிந்தனர். இவ்வாறு எப்பொழுதும் மகளிர் தம் கைகளில் வளைகள் அணிந்திருந்ததால் தழும்புகள் ஏற்பட்டன[19] என்றெல்லாம் சங்க நூல்களில் மகளிர் வளையல்கள் அணிந்திருந்தது பற்றிக் கூறப்படுகிறது.

ஈதன்றி சுடுமண்ணாலான வளையல்களையும், செம்பினால் ஆன வளையல்களையும் இக்கால மக்கள் அணிந்திருந்தார்.

### பிற்காலம்

சங்ககாலத்தை அடுத்துப் பல்லவர் காலம் முதல் பிற்காலம் வரை உள்ள காலத்தைச் சேர்ந்த சிற்பங்களும், செப்புத் திருமேனிகளும், தோளில் கேயூரம் எனப்படும் தோள் வளையையும், முன் கையில் வளைகளையும் அணிந்து காணப் படுகின்றன. தெய்வ மகளிரை வணங்குவதாகக் காட்ட பெறும் மாசதி கற்களில் வளையல்கள் அணிந்த முன்கரங்கள் மட்டும் சிற்பங்களாக வடிக்கப் பெறுவது மரபு. இது வளையலுக்கு நம் முன்னோர் அளித்த பெரும் சிறப்பினைக் காட்டும். இக்காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுக்களிலும், வளையல்கள் பற்றிக் குறிப்புக்கள் காணப்படுகின்றன. இக்காலத்தில் சங்கு, சுடுமண், பொன், செம்பு போன்றவற்றோடு விலையுயர்ந்த கற்கள், அரக்கு, சந்தனக்கட்டை, கண்ணாடி, பீங்கான் போன்றவற்றாலான வளையல்கள் வழக்கத்திலிருந்தன. கங்கைகொண்ட சோழபுரம், பேரூர், போளுமாம்பட்டி, உக்கிரன்கோட்டை, நத்தமேடு போன்ற இடங்களிலும் முன்னர் கூறிய அரிக்கமேடு, காஞ்சி, கரூர், வசவசமுத்திரம், உறையூர், காவிரிப்பூம்பட்டினம் ஆகிய இடங்களிலும் பிற்கால மண் அடுக்குகளில் சங்கு, சுடுமண், அரக்கு, கண்ணாடி ஆகியவற்றாலான வளையல் துண்டுகள் கிடைத்துள்ளன.

பிற்கால இலக்கியங்கள் வளையல்களை அங்கதம், ஆளிக்காப்பு, கங்கணம், கடகம், காப்பு, குருகு, சங்கு, சூடகம், பரியகம், முடுகு, வண்டு, வங்கி எனப் பல்வேறு பெயர்களால் குறிக்கின்றன. அரக்கினாற் செய்யப்பட்ட வளையல்களுக்கு 'முடுகு' எனப் பெயர். இக்காலத்தில் சிறு குழந்தைகள் பிடிதம் எனப்படும் கைவளைகள் அணிந்திருந்தனர்.

சோழர்காலக் கல்வெட்டுக்கள் வளையல்களைப் பாகு வளையம்,[20] திருக்கைக்காரை[21] கடகம்[22] வளையல்[23] சூடகம்[24] எனப் பலவாறு குறிக்கின்றன. பாத வளையம் என்பது பொன்னால் செய்யப்பெற்று விலையுயர்ந்த கற்கள், முத்துக்கள் ஆகியவை பதிக்கப்பெற்று தோளில் அணிவது ஆகும். திருக்கைக் காரை எனப்படுவது பொன்னால் செய்யப்பட்டு வைரம், மாணிக்கம், மரகதம் போன்ற விலையுயர்ந்த கற்கள் பதிக்கப்பட்டு தோள் அல்லது முன்கையில் அணியும் வளையலாகும். கடகம் என்பது பொன்னால் செய்யப்பட்டு முன் கைகளில் அணியும் வளையலாகும். இரத்தினக் கற்கள் பதிக்கப்படும் வளையல் ரத்ந கடகம் எனவும் பவழங்கள் பதிக்கப்படும் வளையல் பவழக் கடகம் எனவும் அழைக்கப்பெறும்.

முத்து வளையல், ரத்ந வளையல் எனப்படுபவை முன்கைகளில் அணிவ தாகும். சூடகம் என்பது கைக்காரை போன்று பொன்னால் செய்யப்பெற்று விலையுயர்ந்த கற்களால் பதிக்கப்பெற்று முன்கைகளில் அணியப் பெறுவ தாகும்.

## கண்ணாடி வளையல்

தமிழகத்து அகழ்வாய்வுகள் அனைத்திலும் பிற்காலத்தைச் சேர்ந்த மண் அடுக்குகளில் (கி.பி. 9-10 நூற்றாண்டு முதல்) கறுப்பு, மஞ்சள், சிகப்பு போன்ற பல வண்ணங்களாலான கண்ணாடி வளையல் துண்டுகள் காணப்படு கின்றன. அராபியர் தொடர்பினால்தான் கண்ணாடி வளையல் நம்நாட்டில் சிறப்பிடம் பெற ஆரம்பித்தன. கி. பி. 9-10 ஆம் நூற்றாண்டில் அராபிய யாத்திரிகர்கள் மூலம் இவ்வளையல்கள் தென் இந்தியாவிற்குள் புகுந்தன. பல வண்ணங்களால் செய்யப்பட்டிருந்த கண்ணாடி வளையல்களின் அழகைக் கண்டு நம்நாட்டு மகளிரும் இவற்றை விரும்பி அணிய ஆரம்பித்தனர். மஹாராஷ்டிர மாநிலத்தில் கோலாப்பூர் என்னுமிடத்தில் நடைபெற்ற அகழ்வாய்வில் பாமினி சுல்தான்கள் காலத்தில் இங்கு மிகப்பெரிய கண்ணாடி வளையல் செய்யும் தொழிற்கூடம் ஒன்று இருந்தது[25] தெரியவந்தது. எனவே கி. பி. 14-ஆம் நூற்றாண்டு முதல்தான் நம்நாட்டில் கண்ணாடி வளையல் செய்ய ஆரம்பித்தனர் எனலாம். அக்காலந்தொட்டு இன்றுவரை படிப்படியாக மற்ற பொருட்களாலான வளையல்களின் முக்கியத் துவம் குறைந்து கண்ணாடி வளையல்கள் அணியும் வழக்கம் சிறப்படைந்தது.

## சடங்குகளில் வளையல்

நம் சமுதாயத்தில் பெண்கள் வளையல் அணிவதை மிகச் சிறப்பாக வைத்துப் போற்றுகின்றனர். கைம்பெண்கள் தவிர பிற பெண்கள் அனை வரும் தம் கைகளில் வளையல்கள் அணிகின்றனர். தற்செயலாகத் தம் கைவளை யல்கள் உடைவதைக்கூட அமங்கலமாகக் கருதுகின்றனர். பெண்கள் பிள்ளை பேற்றின்போது ஒன்பதாவது மாதத்தில் 'வளைகாப்பு' நிகழ்ச்சி நடத்தி முன் கை முதல் முழங்கை வரை வளையல் அணிவித்து மகிழ்கின்றனர். கிராமப் புறங்களில் ஆடிப் பெருக்கின்போது முளைப்பாரியோடு வளையல்களையும் வைத்து வழிபடுகின்றனர். பெண்கள் தாங்கள் சுமங்கலிகளாக இருக்க வேண்டி வழிபடும் வரலட்சுமி விரதம், கேதாரிகௌரி விரதம் போன்ற நோன்புகளின்போது வளையல்களை வைத்து வழிபடுகின்றனர்.

## வளையல் செட்டி

தற்போது வளையல் செட்டியார் (காஜுல பலிஜா) என்னும் இனத்தைச் சேர்ந்தவர்கள் நகரங்களில் வளையல் கடைகள் வைத்தும், கிராமங்களுக்கு வளையல்களை எடுத்துச் சென்றும் வியாபாரம் செய்கிறார்கள். மதுரை ஸ்ரீமீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் ஆவணி மூல விழாவின்போது இவ்வின மக்கள் சிவபெருமான் வளையல் விற்ற திருவிளையாடலை (திருவிளையாடற் புராணம்-வளையல் விற்ற படலம்) மிகச் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர்.

அடிக்குறிப்புகள் :

1. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனுடைய அரசியாகிய பாண்டி மாதேவி கைகளில் தங்க வளைகளை அணிந்திருந்ததோடு வலம்புரிச் சங்கு வளையையும் அணிந்திருந்தாள்.

   " பொலற்கொடி தின்ற மயிர் வார் முன் கை
   வலம்புரி வளையொடு கடிகை நூல் யாத்து"
   (நெடுநல் வாடை 141;142)

   மாநாய்கன் மகளாகிய கண்ணகி கோவலனை இழந்து கைம்பெண் ஆனபோது கொற்றவை கோயிலின் முன் வளையைத் தகர்த்து உடைத்தாள்.

   'கொற்றவை வாயிலில் பொற்றொடி தகர்த்து'
   (கட்டுரைக் காதை 181)

2. " அரம் போழ்ந்து அறுத்த கண் நேர் இலங்கு வளை " (மதுரைக் காஞ்சி 316)
   " அரம் போழ் அவ்வளை பொலிந்த முன் கை " (அகநானூறு 652)
   " அரம் போழ் அவ்வளை தோள் நிலை நெகிழ " (அகநானூறு 125:1)
3 Plano-Concave
4. Plano-Convex
5. "Excavations at Lower Kaveri Valley" Dr. T. V. Mahalingam Page 50
6. "வேளாப் பார்ப்பான் வாள் அரம் துமித்து வளைகளைத் தொழித்து கொழுந்து"
   (அகநானூறு -24:1-2)
7. 'பழந்தமிழர் வாணிகம்' - மயிலை சீனி. வேங்கடசாமி.
8. 'ஆய் தொடி அரிவையர் தந்தை நாடே' (புறநானூறு 117:10)
9. 'இலங்குவளை' (மலை:46, கலி:125)
10. 'எல்வளை' ஒண்தொடி - (நற்: 56; ஐங்: 20)
11. 'வால்வளை '(அகம் 3 90:16)
12. 'தொடி செறி யாப்பும் அமை அரிமுன்கை' (கலித்தொகை-54:3)
13. 'குறுந்தொடி மகளிர் தோள்விடல்' (புறநானூறு 97:24)
14. 'அகன் தொடி செறித்த முன்கை ஒலி நூதல்' (நற்றிணை-77)
15. 'அவிர்தொடி முன் ஆய்இழை மகளிர்' (அகநானூறு 16:5)
16. 'யாவரும் விழையும் பொலற்தொடிப் பகல்வளை' (அகநானூறு 16:5)
17. 'ஆம்பல் வள்ளித்தொடிக்கை மகளிர்' (புறநானூறு 352:5)
18. 'பாம்பு தொடி பாம்பு முடிமேலன' (பரிபாடல் 4:44)
19. 'எடுத்துக் கொள்வது போலும் தொடி வடுக்காணிய' (கலித்தொகை 71:16)
20. S.I.I. Vol. II Nos. 7,39, 51 and 86
21. " தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுக்கள் ". டாக்டர். இரா, நாகசாமி.
22. Ibid Page. 39.
23. Ibid Page. 38.
24. S.I.I. Vol. II No. 57.
25. Aspects of Indian History and Archaeology Dr. H. D. Sankalia Page. 230.

# முற்காலப் பாண்டியர், சேரர் வரலாற்றில் புதிய ஒளி

வெ. வேதாசலம்
காப்பாளர்
திருமலை நாயக்கர் அரண்மனை, மதுரை

மதுரையிலிருந்து மானாமதுரை செல்லும் நெடுஞ்சாலையில் மதுரையிலிருந்து இருபத்துநான்கு கிலோமீட்டர் தொலைவில் திருப்புவனம் அமைந்துள்ளது. இவ்வூரில் உள்ள புட்பவனேசுவரர் கோயில் தேவார மூவரால் பாடப்பெற்ற கோயிலாகும். இக்கோயில் பிற்காலத்தில் திருப்பணி செய்யப் பெற்றமையால் முற்காலப் பாண்டியர் காலத்திலிருந்த கோயிலின் வடிவம் சிதைந்துவிட்டது. அவற்றிலிருந்த பகுதிகள் இக்கோயிலைச் சுற்றிச் சிதைந்து கிடக்கின்றன. தற்போதுள்ள இக்கோயிலில் கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சோமாஸ்கந்தர் செப்புத்திருமேனியும் கி.பி. 9-10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த துர்க்கை, சப்தமாதர் கற்சிலைகளும் காணப் படுகின்றன. இப்பகுதியில் வாழ்ந்த அந்தணர்களுக்குப் பிற்காலப் பாண்டியர் காலத்தில் பிரமதேயம் வழங்கப்பட்டு அதற்கான இரண்டு செப்பேடுகள் அவர் களுக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன.[1] நாயக்கர் காலத்திலும் இவ்வூரும் கோயிலும் சிறப்புடன் விளங்கியிருக்கின்றன. தற்போது திருமலைநாயக்க மன்னனின் உருவச்சிலை இக்கோயில் வாயிலில் காணப்படுகின்றது.

இத்தகு சிறப்புக்களைப்பெற்ற இவ்வூர்ப் புட்பவனேசுவரர் கோயில் பகுதியில், வட்டெழுத்தில் அமைந்த முற்காலப் பாண்டியமன்னர் கல் வெட்டுக்கள் இரண்டு அண்மையில் கண்டறியப்பட்டுள்ளன.[2] இக்கல்வெட்டுக் களில் ஒன்று திருப்புவனம் புட்பவனேசுவரர் கோயிலின் திருச்சுற்றிலும் மற்றொன்று இக்கோயிலின் வெளிப்புறத்திலும் காணப்படுகின்றது. இக் கல்வெட்டுக்கள் இவ்வூரிலிருந்து சிதைந்துபோன முற்காலப் பாண்டியர் காலச் சிவன்கோயிலைச் சார்ந்தவையாகும். ஒன்று அக்கோயிலில் இருந்த தூணிலும் மற்றொன்று கருவறைத் திருநிலைவாயிலில் இருந்த கல்லிலும் பொறிக்கப் பட்டுள்ளன. இக்கல்வெட்டுக்கள் பாண்டியர் கலை வரலாற்றினையும், அரசியல் வரலாற்றினையும், சேரமன்னர் வரலாற்றினையும், பாண்டியர் சேரர் உறவினையும் அறிய உறுதுணை புரிகின்றன.

## கல்வெட்டுக்களின் காலம்

இக்கல்வெட்டுக்களின் எழுத்தமைதியைக் கொண்டும் இவற்றில் காணப் படும் செய்தியைக் கொண்டும் இவற்றைக் கி.பி. 10-ஆம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதியைச் சார்ந்ததென்று கணிக்கலாம். இக்கல்வெட்டுக்கள்

இரண்டும் சடையன்மாறனாக விளங்கிய, சின்னமனூர்ப் பெரிய செப்பேட்டை வெளியிட்ட இராசசிம்மன் காலத்துக் கல்வெட்டுக்களாகக் கருதலாம். ஒன்று இரண்டாவது ஆட்சியாண்டிலும் மற்றொன்று இவனது நாலாவது ஆட்சி யாண்டிலும் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டில் இவ்வூர்க் கண்மாய் 'இராசசிங்ககுளம் என்று குறிப்பிடப்படுவதால் இராசசிம்மனால் அக்கண்மாய் பெயர் பெற்ற பிறகு இக்கல்வெட்டு பொறிக்கப்பெற்றிருக்கலாம். இக்குளத் தின்கீழ் அமைந்த 'சூழல்' என்ற கிராமத்தில் தங்கியிருந்தபோதுதான் இராசசிம்மன் சின்னமனூர்ப் பெரிய செப்பேட்டின் ஆணையை வழங்கியிருக் கின்றான்.

## முதலாம் கல்வெட்டு

திருப்புவனம் புட்பவனேசுவரர் கோயில் திருச்சுற்று நடைபாதையில் வடமேற்கு மூலையில் பதிக்கப்பட்டிருக்கும் இரண்டு கற்களில் இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டின் இறுதிவரிகள் சற்று சிதைந் துள்ளன.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கோ
2. ச்சடையமா
3. றக்கு யாண்டு 2[1]
4. இவ்வாண்டு இ
5. ராசசிங்க கு
6. ளக்கீழ் குண
7. வூர் அய்யன்
8. மணக்காடு உ
9. டையானுக்கு வீ
10. ரபாண்டிய வீ
11. ணை மாராயன்
12. ஆயின அரை
13. யன் வீரநாரா
14. யணன் மணவாட்
15. டி கொம்மன
16. சாமி அக்க
17. ன் சிரி கோயி
18. ல் எடுத்து பி
19. ரதிட்டை செ
20. ய்து ஒரு திரு
21. நொந்தா விள
22. க்கு வச்சு
23. இதனுக்கு
24. குடுத்த சாவா மூவாபே
25. [ரா] டு 75 எ[1][மு]பத்தஞ்
26. சும் காத்துவைச்சு நி
27. சதம் நாராய உழக்கா
28. ல் உழக்கு நெய் மு
29. ட்டாமல் அட்டுவா
30. ன் திருப்புவணத்து
31. தேவர் வெட்டிக்குடி
32. பூவணவன் அரைய
33. ன் இவனுக்கு
34. தேவன் அ
35. . . . . . . . .

1. கல்வெட்டில் இவ்வெண்கள் தமிழ் எழுத்துக்களில் உள்ளன.

## செய்தியும், சிறப்பும்

சடையன்மாறனின் (இராசசிம்மனின்) இரண்டாவது ஆட்சியாண்டில் குணவூர் அய்யன் மணக்காடு உடையான் என்பவனின் அக்கனும் (அக்காள்) வீரபாண்டிய வீணைமாராயன் ஆயின அரையன் வீரநாராயணன் என்பவனின்

மணவாட்டியுமான கொம்மனசாமி என்பவள் சிரிகோயில் எடுத்து, பிரதிட்டை செய்து அக்கோயிலில் ஒரு நந்தாவிளக்கு எரிப்பதற்காக எழுபத்தைந்து ஆடுகள் திருப்புவனத்துத் தேவர் வெட்டிக்குடி (இடைக்குடி) பூவணவன் அரையன் என்பவனுக்கு அளித்ததைத் தெரிவிக்கின்றது. இவற்றைப் பெற்றுக்கொண்ட பூவணவன் அரையன் நிசதம் திருப்புவனத்துத் தேவர்க்கு நாள்தோறும் உழக்கு நெய்க்குக் குறையாமல் அளக்கவேண்டும் என்றும் இக்கல்வெட்டு தெரிவிக்கின்றது.

இக்கல்வெட்டில் இரண்டு பாண்டிய அதிகாரிகளின் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன. அவர்களில் ஒருவன் வீணைமாராயன் என்று சிறப்பித்துக் கூறப்படுகின்றான். இவனே வீரபாண்டியன் என்ற பெயரையும் பெற்று வீரபாண்டிய வீணைமாராயன் ஆயின அரையன் வீரநாராயணன் என்று அழைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இராசசிம்மனின் கல்வெட்டு ஒன்றில் அவனது தந்தையின் பெயரான வீரநாராயணன் பெயரும் குறிப்பிட்டுக் கல்வெட்டு கிடைத்திருப்பது இதுவே முதல் முறையாகும். மேலும் இவன் வீணை வாசிப்பதில் வல்லவனாக விளங்கியமையால் இவன் வீணைமாராயன் என்ற விருதினைப் பெற்றிருக்கவேண்டும். இக்கல்வெட்டில் இவ்வூர்க் குளம் இராச சிங்ககுளம் என்று இராசசிம்மனின் பெயரால் அழைக்கப்பட்டிருக்கின்றது. திருப்புவனத்தில் உறைகின்ற சிவனுக்குக் கற்றளி எடுத்தவர் யார் என்பதையும் அவர் ஒரு பெண் என்பதையும் இக்கல்வெட்டுச் செய்தி உணர்த்துகின்றது.

## இரண்டாம் கல்வெட்டு

புட்பவனேசுவரர் கோயில் கிழக்குப்புறச் சுவரின் வெளிப்புறத்தில் சாலையில் கிடக்கும் உடைந்த தூணில் இக்கல்வெட்டு உள்ளது:

| | | | |
|---|---|---|---|
| 1. | ஸ்வஸ்திஸ்ரீ கோ | 19. | க் கால் நி |
| 2. | ச்சடையமாறக்கு | 20. | யதி உரி |
| 3. | யாண்டு 2 இதனெதி | 21. | ய் நெய் மு |
| 4. | ர் 2 இவ்வாண்டு | 22. | ட்டாமல் |
| 5. | திருப்பூவணத்து | 23. | அட்டு வா |
| 6. | ப்படாரர்க்கு சேரமா | 24. | ன் இவ்வூ |
| 7. | நார் இராசாதித் | 25. | ர் படைத்த |
| 8. | தவர்ம்மராஇன கோ | 26. | லைவன் [வி] |
| 9. | க்கோதை வர்ம்மர் வை | 27. | டையாபதி |
| 10. | த்த திருநொந்தா வி | 28. | இவனுக் |
| 11. | ளக்கு ஒன்றினு | 29. | குப் புணை |
| 12. | க்கு பகலும் இரவு | 30. | இவ்வூர் |
| 13. | ம் முட்டாமல் எரிவதா | 31. | படைத்தலை |
| 14. | க வைச்ச ஆடு நூறு | 32. | வன் நி . . . . |
| 15. | இவை சாவாமூவாப் | 33. | வன் வி |
| 16. | [பேராடா]கப் பகலும் | 34. | ந்தன் இ |
| 17. | காத்து மே[ச்சு] | 35. | . . . . . . . |
| 18. | நாராய உழ | 36. | . . . . . . |

## செய்தியும் சிறப்பும்

இக்கல்வெட்டு சடையன்மாறனின் (இராசசிம்மன்) நான்காம் ஆட்சியாண்டில் திருப்புவனத்துப் படாரர்க்கு ஒரு நந்தாவிளக்கு எரிப் பதற்காகச் சேரமன்னனான சேரமாநார் இராசாதித்தவர்மரான கோக்கோதைவர்மர் நூறு ஆடுகள் அளித்ததைத் தெரிவிக்கின்றது. இவ்வாடுகளை இவ்வூர்ப் (இடைக்குடி) படைத்தலைவன் விடையாபதி காத்து மேய்த்துத் திருப்புவனத்துப் படாரர்க்கு நாள்தோறும் உரிநெய் அளக்க வேண்டும். இவனுக்குப் புணையாக யார் விளங்கியது என்பதை இக் கல்வெட்டு தெரிவிக்கின்றது.

பாண்டியர்க்கும் சேரர்க்கும் உள்ள தொடர்பைத் தெளிவாக்கும் வகையில் முற்காலப்பாண்டியர் கல்வெட்டு ஒன்றில் சேரமன்னன் ஒருவன் குறிப்பிடப்படுவது மிகச் சிறப்பான செய்தியாகும். இக்கல்வெட்டில் குறிப் பிடப்படும் சேரமன்னன் பாண்டிய மன்னனோடு உறவுகொண்டு விளங்கி யமையால் பாண்டியன் தலைநகருக்கு அருகில் அமைந்த பாடல் பெற்ற திருப்புவனம் கோயிலுக்கு வந்து நிவந்தம் அளித்துள்ளான். இவன் பாண்டிய அரசனின் விருந்தினனாக மதுரைக்கு வந்த வேளையில் இதனைச் செய் திருக்கலாம். பாண்டிய மன்னன் பராந்தக வீரநாராயணன் சேரன் மகள் வானவன்மாதேவியை மணம்புரிந்தவன் ஆவான். அவர் வயிற்றில் தோன்றிய வனே இக்கல்வெட்டிற்குரிய அரசனான (சடையமாறன்) இராசசிம்மன் ஆவான்.

## கல்வெட்டு குறிக்கும் சேரமன்னன்

இக்கல்வெட்டு குறிக்கும் சேரமன்னன் இராசசிம்மனுக்கு என்ன உறவு என்று தெரியவில்லை. ஆனால் இவன் யார் என்பதை உய்த்தறியலாம். முற்காலப்பாண்டியர் காலத்தில் கி.பி. 844க்கும் 962க்கும் இடைப்பட்ட காலத்தில் சேரநாட்டில் ஆட்சிபுரிந்த சேரமன்னர்கள்[3] கீழ்க்கண்ட நால்வர் ஆவார்கள்:

1 தாணுரவி (கி.பி. 844 - 885)
2 இராமவர்மன் குலசேகரன் (கி.பி. 885 - 917)
3 கோதைரவி (கி.பி. 917 - 947)
4 இந்துகோதை (கி.பி. 944-962)

மேற்கண்ட நால்வரில் இராசசிம்மன் ஆட்சிக்காலத்தில் வாழ்ந்தவர்கள் இராமவர்மன், கோதைரவி என்ற இரு சேர மன்னர்கள் ஆவார்கள். இவர்களில் இராமவர்மன் இராசசிம்மனின் ஆட்சிக்காலத்தின் முற்பகுதியினை (நான்காவது ஆட்சியாண்டு) சேர்ந்தமையால் இக்கல்வெட்டில் குறிக்கப் படும் சேரமன்னன் சேரநாட்டில் கி.பி. 885 முதல் 917 வரை ஆட்சி புரிந்த இராமவர்மனாக இருக்கவேண்டும் எனலாம். இவன் கல்வெட்டில் சேரமாநார் இராசாதித்தவர்மராயின கோக்கோதைவர்ம்மர் என்று குறிப்பிடப் படுகின்றான். இராமவர்மனுக்கு இராசாதித்தவர்மர் என்ற பெயர் முடிசூடும்

நாளில் இடப்பட்டப் பெயராகும்[4] இப்பெயரே திருப்புவனம் கல்வெட்டில் குறிப்பிடப்படும் சேரமன்னன் இராமவர்மன் என்பதை உறுதிப்படுத்துகின்றது. மேலும் இவன் கோக்கோதை என்றும் குறிப்பிடப்படுகின்றான். இவனுக்குப் பின்னர் வந்த இவன் மகன் கோதைரவி சேர நாட்டில் ஆட்சி புரிந்திருக்கின்றான்.

சேர மன்னர்க்கும் பாண்டியர்க்கும் உள்ள மணவுறவுகள் முற்காலப் பாண்டியர் செப்பேடுகளில் குறிப்பிடப்படுகின்றன. ஆனால் அவற்றில் பலவற்றில் எந்த சேரமன்னன் என்பது தெளிவாக அறியும்படி குறிப்பிடப்பட வில்லை. இச்சூழ்நிலையில் திருப்புவனம் கல்வெட்டு பாண்டிய மன்னரோடு உறவு வைத்துப் பாண்டியநாடு வந்த ஒரு சேரமன்னன் யார் என்பது பற்றிய ஒரு தெளிவான செய்தியைத் தருவது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

*அடிக்குறிப்புகள் :*

1. Subramanya Iyer K. V., Tiruppuvanam plates of Jatavarman Kulasekara in Epigraphia Indica vol. XXV.
2. இக்கல்வெட்டுக்கள் இரண்டும் களவாய்வின்போது கட்டுரையாசிரியரால் கண்டறியப் பெற்றவை.
3. Kunjanpillai. P. N. Elamkulam. Studies in Kerala History. National Book Stall, Kottayam. June 1920, pp. 221-226.
4. Ibid pp. 225-226.

---

# தாய்த்தெய்வம்

இத்துறையால், தென்னார்க்காடு மாவட்டம் திருக்கோயிலூரைச் சுற்றியுள்ள பகுதியில் கள ஆய்வு நடத்தியபோது இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முந்திய தாய்த்தெய்வம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

திருக்கோயிலூருக்கு 25 கி.மீ. தொலைவில் உடையாநத்தம் என்ற கிராமத்தில் இவ்வுருவம் பெருங்கற்கால ஈமச் சின்னங்களுக்கிடையே அமைந்துள்ளது. இஃது தாய்த் தெய்வ வழிபாட்டின் ஆரம்ப கால உருவமாக இருக்கக்கூடும் எனக் கருதப்படுகிறது. இது போன்ற உருவம் திருவண்ணாமலைக்கு அருகில் முன்பு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதை 'அதிதி' என்று சிலர் கருதுகிறார்கள்.

—எஸ். வசந்தி

# கானாடு காத்தான் பெரிய கோயில்

மா. சந்திரமூர்த்தி எம்.ஏ.,
பதிவு அலுவலர்
தொல்பொருள் ஆய்வுத்துறை, சிதம்பரம்

இராமநாதபுரம் மாவட்டம் காரைக்குடி வட்டம் காரைக்குடிக்கு வடக்கே 17 கி.மீ. தொலைவில் கானாடுகாத்தான் என்னும் ஊர் உள்ளது. கானாடு காத்தான் ஊருக்கு வடமேற்கே 3 கி.மீ. தொலைவிலும், கானாடுகாத்தான் கண்மாயின் கீழ்புறமும் இக்கோயில் அமைந்துள்ளது. நேமத்தான்பட்டி ரயில் நிலையத்தில் இறங்கி இவ்வூர்ப் பெரிய கோயிலை எளிதில் அடையலாம்.

## பெரிய கோயில்

இக்கோயில், கண்மாயின் கீழ் கரை அருகில் இயற்கையான சூழலில் அமைந்துள்ளது. பெரிய கோயில் என்று ஊர் மக்களால் அழைக்கப்படுகிறது. இக்கோயில் உள்ள இடத்தில் கி.பி. 1000-ல் சிவலோகநாதர் என்னும் பெயரில் புகழ்பெற்ற கோயில் ஒன்று இருந்தது. இக்கோயில் இறைவன் கி.பி. 12, 13-ஆம் நூற்றாண்டுகளில் சிவலோகநாதர், சிவலோகநாயனார், பெருமான் சிவலோகமுடையான் என்ற பெயர்களில் சிறப்புடன் அழைக்கப்பட்டு வந்துள்ளது இதனை இக்கோயில் கோபுரவாயில் முன் தாழ்வாரத்தில் பதிக்கப்பட்டுள்ள பிற்காலப் பாண்டியர்களின் கல்வெட்டுக்கள் துணை கொண்டு அறிகிறோம். இக்கோயிலுக்கு அளிக்கப்பட்ட நிலக் கொடையையும், அந் நிலத்திற்கு உரிய நான்கு எல்லைகளையும் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. சாசனங்களில் கையொப்பமிட்டவர்களையும் சில கல்வெட்டுக்கள் குறிப்பிடு கின்றன. விஜய நகர மன்னர் காலத்து கல்வெட்டு ஒன்றும் இக்கோயிலில் உள்ளது. எனவே இக்கோயில் கி.பி. 1000 முதல் கி.பி. 1500 வரை சீரிய முறையில் இருந்து வந்ததை கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன. கி.பி. 16-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு பழைய கோயிலின் கட்டிடங்கள் நாளடைவில் சிதைவுற்றன. பின்னர் சிவகங்கை அரசர்களின் நிர்வாக ஆளுகையில் இருந்து வந்த கோயிலை கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் நகரத்தார்கள் எடுத்துப் பழைய கோயில் கட்டுமானங்களைப் பத்திரமாக அகற்றி முற்றிலும் புதியதாகக் கோயிலைத் திருப்பணி செய்துள்ளனர். கோயில் தோற்றம் பாண்டியர் காலத்தது. திருப்பணி நாட்டுக் கோட்டை நகரத்தார் காலத்தது.

## இறைவன் சன்னதி

சிவன் கோயில் கருவறை, அர்த்தமண்டபம், மகா மண்டபம், முக மண்டபம் திருச்சுற்று; கோபுரம் ஆகிய பகுதிகளைக்கொண்டு விளங்குகிறது. இறைவன் அருள்மிகு சிவலோகநாதர். இறைவி சௌந்திர நாயகி. கருவறை

புறச்சுவரின் தேவகோட்ட மாடங்களில் ஆலின் கீழ் அமர்ந்த அண்ணல், நான்முகன் ஆகிய உருவங்களும்; அர்த்த மண்டப கோட்டத்தில் பிள்ளை யார், துர்க்கை ஆகிய உருவங்களும் உள்ளன. கருவறையின் மேல் விமானத்தை அலங்கரிக்கும் சிகரம் வட்ட வடிவான வேசரவகையைச் சார்ந்தது.

**அர்த்த மண்டபம்**

அர்த்த மண்டபம் சதுரமானது. தூண்கள் ஏதுமின்றி எளிமையாகக் காட்சியளிக்கிறது. அர்த்த மண்டபத்தின் வாயிலில் துவாரபாலகர் சிற்பங்கள் இல்லை. இக்கோயில் அர்த்த மண்டபத்தின் தென்மேற்கு மூலையில் வலம்புரி விநாயகரின் உருவம் ஒன்று உள்ளது. இது சுமார் கி.பி. 900-இல் செய்தளிக்கப் பெற்ற உருவம். இக்கோயிலில் உள்ள சிற்பங்களில் இதுவே தொன்மையும் புகழும் மிக்கது.

**மகா மண்டபம்**

மகா மண்டபத்தின் இருவாயிலிலும் இரு துவாரபாலகர் சிற்பங்கள் உள்ளன. மகா மண்டபம் சதுரமான அமைப்புடையது. மகா மண்டபத்தின் வடதிசையில் நடராசர் சன்னதியும், தென்புறத்தில் அதன் வாயிலும் உள்ளன. இக்கோயிலின் அர்த்த மண்டபமும், மகா மண்டபமும் நூதனமாக அமைக்கப் பட்டுள்ளன. இம்மண்டபத்தின் தரையிலும், சுவரிலும் இத்தாலி நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட கருப்பு-வெள்ளை சலவைக்கற்கள் பதிக்கப் பட்டுள்ளன.

**முக மண்டபம்**

முக மண்டபத்தைப் பெருந்தூண்கள் தாங்கி நிற்கின்றன. இம் மண்டபத்தின் நடுவே நந்தியும், கொடிமரமும் அமைக்கப்பட்டுள்ளன. கொடி மரம் உலோகத்தகட்டால் வேயப்பட்டுள்ளது. இறைவன் சன்னதி திருச் சுற்றின் தென்மேற்கு மூலையில் விநாயகர் சன்னதி அமைந்துள்ளது.

**உருக்கால்கள்**

விநாயகர் சன்னதி முன்மண்டபத் தூணில், சுப்ரமணியஞ் செட்டி யாருக்கு 5 அடி உயரத்தில் கல்லிலே உருக்கால் ஒன்று உள்ளது.

சுப்ரமணியர் சன்னதி, வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ளது. இச் சன்னதியின் முன்மண்டபத்தில் 6 அடி உயரத்தில் செ. மாணிக்கம் செட்டி யாரின் உருக்கால் ஒன்று உள்ளது. வடதிசை நோக்கியுள்ள இவ்வுருவம் அஞ்சலித்த நிலையில் காணப்படுகிறது.

கொடிமரத்திற்கு முன் உள்ள மண்டபத் தூணில் சொ.மு. முத்தப்பச் செட்டியார், சொ.மு. பெரிச்சியப்ப செட்டியார் ஆகிய இருவரின் உருக்கால்கள் 6 அடி உயரத்தில் உள்ளன. இவ்வுருவங்கள் அஞ்சலித்து வடதிசை நோக்கி

நிற்கின்றன. இச் சிற்பங்கள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் (சுமார் கி.பி. 1888) இறுதிப் பகுதியைச் சார்ந்தவை.

### பரிவார தெய்வங்கள்

இக்கோயில் கருவறையின் வடக்குப் பகுதியில் சண்டிகேஸ்வரர் சன்னதி உள்ளது. திருச்சுற்றின் வடகிழக்கு மூலையில், பைரவர் சன்னதி தெற்கு நோக்கி அமைந்துள்ளது. கோபுரவாயிலின் உட்புறம் சூரியன், சந்திரன் உருவச்சிலைகள் உள்ளன. சுவாமி கோபுரம் மூன்று நிலைகளை உடையது. இக்கோயிலை லட்சிமிபுரம் சொ. மு. குடும்பத்தினர் திருப்பணி செய்துள்ளனர். இவர்கள் கானாடுகாத்தான் பழையூரில் இருந்தவர்கள் என அறிகிறோம்.

### அம்மன் சன்னதி

இறைவிக்கு சௌந்தரநாயகி அம்மன், ஒப்பில்லாம்பிகை என இரண்டு பெயர்கள் உண்டு. அம்மன் சன்னதி கருவறை சதுரவடிவானது. அம்மன் இரண்டு திருக்கரங்களுடன் திரிபங்கத்தில் நின்றகோலத்தில் காணப்படுகிறது. கருவறையில் உள்ள அம்மன் வலக்கையில் நீலோற்பலம் பற்றி, இடக்கையைத் தாழ்கையாகக்கொண்டு, நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறார். அம்மன், சன்னதி முன்னுள்ள அர்த்தமண்டபம் சிறியது. சதுரவடிவானது. மகா மண்டபத்தை இரு வரிசைகளில் 14 தூண்கள் தாங்கிநிற்கின்றன. அம்மன் சன்னதி மேல்பிரகாரத்தைச் சுற்றிலும் தூண்கள் அலங்கரிக்கின்றன. மகா மண்டபத்தின் முன்னுள்ள மண்டபத் தூணில் அண்ணாமலை செட்டியார், நாகலிங்க செட்டியார் ஆகிய இருவரின் உருக்கால்கள் உள்ளன.

### சோமாஸ்கந்தர் மண்டபம்

இறைவன் சன்னதிக்கும், இறைவி சன்னதிக்கும் இடையே சோமாஸ் கந்தர் மண்டபம் அமைந்துள்ளது. இது கடப்பைக் கல்லால் செய்யப் பட்டு, வனப்புடன் விளங்குகிறது. இதற்குமுன் கீழ்மேலாக நீண்டுள்ள மண்டபத்தை 16 தூண்கள் தாங்கி நிற்கின்றன. இம்மூன்று சன்னதிகளும் தனித்தனியே அமைக்கப்பட்டுள்ளன. இம்மூன்று சன்னதிகளைச் சுற்றிலும் பெரிய திருச்சுற்றும், திருச்சுற்று மாளிகையும், மதிலும் அமைந்துள்ளன. தென் மேற்கில் சோமாஸ்கந்தர் உற்சவ மண்டபமும், கருவூலமும் உள்ளன. வடமேற்கு மூலையில் மகாலட்சுமி சன்னதி உள்ளது. வடகிழக்கு மூலையில் கட்டளை கருவூலம், யாகசாலை யாவும் அமைந்துள்ளன. தென்கிழக்கு மூலையில் மடப்பள்ளி உள்ளது. திருச்சுற்று மதிலின் கீழ்புறத்தில் மூன்று கோபுரவாயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. அம்மன் சன்னதி முன்உள்ள கோபுரமும் மூன்று நிலைகளை உடையன.

### வலம்புரி விநாயகர்

இது ஒரு அரிய சிற்பம். இக்கோயில் இறைவன் சன்னதி அர்த்த மண்டபத்தின் தென்மேற்கு மூலையில் காணப்படுகிறது. இதுவே இக் கோயில் கலைச்செல்வங்களில் தொன்மையும் புகழும் மிக்கது. இவ்விநாயகர்



சிற்பத்திற்குச் சில தனிச்சிறப்புகள் உண்டு. 1. இது வலம்புரி விநாயகர் 2. இவ்வுருவம் மற்ற சிற்பங்களுக்கு மாறாக இடது காலைத் தாமரைப் பீடத்தில் நன்றாக மடித்துவைத்து, வலதுகாலைப் பீடத்தின்கீழ் தொங்க விட்டுள்ளது. 3. விநாயகர் நான்கு கைகளில் ஏந்தியுள்ள ஆயுதங்கள் மாறியுள்ளன.

விநாயகரின் மேல் வலக்கை மழுவை ஒத்த ஆயுதத்தைப் பற்றியுள்ளது. இடக்கை அக்கமாலையைப் பற்றியுள்ளது. இவ்விரு கைகளும் கத்திரி முத்திரையில் ஆயுதங்களைப் பற்றியுள்ளன. கீழ் வலக்கை உருண்டையான மோதகத்தைப் பற்றிக், கையை வலது தொடையின்மீது கொண்டுள்ளது. இடக்கை சிறிய தந்தத்தைப் பிடித்து இடது தொடையின்மீது உள்ளது. இக்கை கடக முத்திரையில் அமையவில்லை. ஐந்து விரல்களாலும் தந்தத்தைப்பற்றிப் பிடித்து, அக்கையைத் தொடையின் வெளிப் பக்கத்தில் திருப்பியுள்ளது. தலையைக் குட்டையான கரண்ட மகுடம் அணிசெய்கிறது. காதுகள் முக்கோண வடிவில் பக்கங்களில் விரிந்துள்ளன. கழுத்தில் கற்கள் பதித்த கண்டமாலை ஒன்றும், இடது தோளில் இருந்து வலது மேல் வயிற்றில் ஏறிச் செல்லும் முப்புரிநூலும், வயிற்றில் கற்கள் பதித்த உதரபந்தமும், மேல்தோளில் புஷ்பகேயூரமும், முன்கையில் உருண்டையான மூன்று வளையும், காலில் பாதசரமும் அணிசெய்கின்றன. இடையில் தொடைவரை பளுவான ஆடை உள்ளது. இடக்காலில் உள்ள ஆடை முழங்காலுக்குக் கீழ்வரை நீண்டுள்ளது. ஆடையின் வரம்புகள் தடித்த நாடாவைப்போன்று பட்டையாக உள்ளன. கீழ்நோக்கி ஒடுங்கிய யானைமுகமும், மெலிந்த துதிக்கை நடுவயிற்றை அடைந்து வலம்புரியாக வளைந்துள்ளது. வயிறு முன்பக்கம் சரிந்துள்ளது. துதிக்கையின் வலப்புறம் உள்ள தந்தம் சிறியது. இச்சிற்பத்தின் உருவமைதியைக்கொண்டும், ஆடை அமைப்பு, அணிகளின் அமைப்பு, மாறுபட்ட ஆயுதங்கள் யாவும் கொண்டு பழமையான சிற்பமாகக் கருதப் படுகிறது. காலம் கி.பி. 900. முற்காலப் பாண்டியர் கலை. உயரம் 72 செ.மீ. அகலம் 52 செ.மீ.

## வாகனங்கள்

இக்கோயிலில் வெள்ளி வாகனங்களும், மர வாகனங்களும் உள்ளன. வெள்ளி வாகனங்கள் வேலைப்பாடு மிக்கவை. அவையாவன: வெள்ளி ரிஷப வாகனம், சிறிய ரிஷப வாகனம், வெள்ளி மயில் வாகனம், வெள்ளி அன்ன வாகனம், வெள்ளி மூசக வாகனம், இராவணன் கயிலையை ஏந்தும் வெள்ளி வாகனம், வெள்ளி கேடகம், வெள்ளி மஞ்சம், இவை யாவும் மரத்தால் செய்யப்பட்டு வெள்ளித் தகடுகளைக்கொண்டு போர்த்தப்பட்டவை. இவை

தவிர முழுதும் மரத்தாலான ரிஷபம், மயில், மூசகம், முதலிய மர வாகனங்களும், பல்லக்கு ஒன்றும் உள்ளன. இக்கோயிலுக்கு இரண்டு தேர்கள் உள்ளன.

### விழாக்கள்

ஆண்டுதோறும் ஆனி மாதத்தில் பிரமோற்சவம் 11 நாட்கள் சிறப்பாக நடைபெறுகிறது. அப்போது மேற்படி வாகனங்களில் உற்சவ விக்கிரகங்கள் வீதி புறப்பாடு வரும். சுமார் 15 ஆண்டுகட்கு முன்பு சுவாமி புறப்பாடு நேரத்தில் கோயில் தேவரடியாள் வெஞ்சாமரம் வீசுவர். சுவாமிமுன் சதுர் ஆடுவர். கும்பகோணத்தில் இருந்து சதுர்காரிகள் வரவழைக்கப்பட்டு நாட்டியங்கள் நடத்தப்பெற்றன. தற்போது பிரமோற்சவ காலங்களில் தெப்ப விழாவும், தேரோட்டமும் சிறப்பாக நடைபெறுகிறது. கோயில் தெப்பக்குளம் திருமதிலை ஒட்டி வடக்கே அமைந்துள்ளது.

### கோயில் பணியாட்கள்

இக்கோயிலில் குருக்கள், சுயம்பாகம், அத்தியானம், ருத்திரஜபம், ஓதுவார், காவல் (8 கரை), ஜாடுமாரி, வைராவி, மாலைகட்டி ஆகியோர் உள்ளனர். முன்பு 8 கரைகள் காவல் இருந்தனர். தற்போது நால்வர் மட்டும் உள்ளனர்.

### மானியம்

குருக்கள் மானியம், வைராவி மானியம், காவல் மானியம், சின்ன மேள பெரிய மேள மானியம், தேவரடியாள் மானியம் ஆகிய கோயில்பணியாளர்களின் மானியங்கள் இன்றும் உள்ளன.

### பிற ஊர்க் கோயில்கள்

1. அழகு நாச்சியம்மன் கோயில்: இது பெரிய கோயிலுக்கு மேற்புறம் அமைந்துள்ளது. வடக்கு நோக்கியது. கருவறையில் அம்மன் உருவம் அமர்ந்த கோலத்தில் எண்தோள்களுடன் காணப்படுகிறது.

2. வரதராஜப் பெருமாள் கோயில்: இது அம்மன் கோயிலுக்கு தென்புறத்திலும் பெரிய கோயிலுக்கு மேல்திசையிலும் அமைந்துள்ளது. கோயில் கிழக்கு பார்த்தது. நாட்டுக்கோட்டை நகரத்தார் திருப்பணி செய்துள்ளனர்.

3 அய்யனார் கோயில்; இக்கோயில், கரைமேல் அழகர் என்ற பெயரில் விளங்குகிறது. கண்மாயின் கீழ்புறம் கோயில் அமைந்துள்ளது. பிற்காலத்தில் நகரத்தார் திருப்பணி செய்துள்ளனர்.

4 பிள்ளையார் கோயில்: அரச மரத்தடியில் உள்ளது. கட்டிடம் இல்லை.

5. முனீஸ்வரன் கோயில்: இது பிள்ளையாரின் முன்புறம் உள்ளது.

6. கண்மாய் கருப்பு: இது கண்மாய் கரையில் உள்ளது. இங்கு கருப்பு, கன்னிமார் சிலைகள் வழிபாட்டில் உள்ளன.

# துறவிருந்து இறந்தார் கல்

நடன. காசிநாதன், எம்.ஏ.,
இயக்குநர் (பொறுப்பு)
தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை-28

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை அண்மையில் பெரியார் மாவட்டம், பவானிக்கு அருகில் உள்ள ஈரெட்டி மலையில் கண்ணப்பன் என்பவரது வீட்டில் பழமையான கல்வெட்டு ஒன்றைக் கண்டுபிடித்துள்ளது.[1] இக்கல்வெட்டு ஒரு சிறிய கல்லின்மீது பொறிக்கப்பட்டு காணப்படுகிறது. கல் செவ்வக வடிவுடையதாகவும் ஒரு முனையில் சிறிது செதுக்கப்பட்டும் காணப் படுகிறது. அச் செதுக்கப்பட்ட பகுதியில் இரு வரிகளில் இக்கல்வெட்டு காணப்படுகிறது. மிகச் சிறிய கல்வெட்டு. வாசகமும் சுருக்கமாக உள்ளது. ஆனால் அது புலப்படுத்தும் செய்தி மிக முக்கியமானதாகும். இக்கல்வெட்டு தற்பொழுது இத்துறையில் பாதுகாப்பாக உள்ளது.[2] அண்மையில் சென்னை யில் நடைபெற்ற வர்த்தகப் பொருட்காட்சியிலும் மக்களின் பார்வைக்கு வைக்கப் பெற்றிருந்தது. கல்வெட்டின் வாசகம்:

"துறகய்யுள்
ளாரு கல்"

## கல்வெட்டின் பொருள்

துறகை என்னும் ஊரைச் சார்ந்த ஒருவர் இறந்துபட அவருக்காக எடுக்கப்பட்ட கல் என்றோ; அல்லது துறவு பூண்டிருந்த ஒருவர் இறந்து பட அவருக்காக எடுக்கப்பட்ட கல் என்றோ கொள்ளலாம். கல்வெட்டுப் பொறிப்பு ஆழமில்லாது இருப்பதினால் எழுத்துக்களைப் படிப்பது சற்று கடினமாக உள்ளது.

அப்பகுதியில் விசாரித்த போது துறகை என்ற ஊர் இருந்ததாகவோ அல்லது இருப்பதாகவோ தெரியவில்லை. ஆதலால் துறவு பூண்ட ஒருவர் இறந்துபட அவருக்கு எடுத்த கல்லைத்தான் குறிக்கிறது என்று கொள்வதே பொருத்தமாகத் தோன்றுகிறது.

துறவு பூண்டு இறத்தல் என்பதும், வடக்கிருந்து இறத்தல் என்பதும் தமிழ்நாட்டில் பண்டு தொட்டு இருந்து வரும் பழக்கமாகும். தென்னார்க்காடு மாவட்டம் செஞ்சிக்கு அருகில் திருநாதர்குன்று என்று ஒரு மலை உள்ளது. அம்மலையில் தீர்த்தங்கரர் சிற்பங்கள் வரிசையாகப் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுக் காணப்படுகின்றன. அவைகளுக்கு அருகில் ஒரு கல்வெட்டு இருக்கிறது.[3] அதில் கீழ்வருமாறு எழுதப்பட்டுள்ளது.

## திருநாதர்க்குன்று கல்வெட்டு

ஐம்பத்தே[ழு]ன
சனந் நோற்ற
சந்திர நந்தி ஆ
சிரிகரு நிசீதிகை

ஐம்பத்தேழு நாட்கள் உண்ணாநோன்பு நோற்ற சந்திரநந்தி என்ற சமண முனிவர் உயிர் நீத்தார் என்பதும் அவரது நினைவாக நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டுள்ளது என்பதும் அதன் பொருளாகும். இக்கல்வெட்டு கி.பி. 5-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்பர். இதிலிருந்து சமண முனிவர்கள் உண்ணா நோன்பு இருந்து உயிர் நீத்தலும் அவ்வாறு உயிர் நீத்தவர்களுக்கு நினைவுச் சின்னங்கள் அமைப்பதும் வழக்கில் இருந்தது என்பதை அறியலாம்.

## புறநானூறு புலப்படுத்தும் செய்தி

திருநாதர்க்குன்றுக் கல்வெட்டுக் காலத்துக்கு முந்தையதான சங்ககால இலக்கியமான புறநானூறு, வடக்கிருந்து உயிர்துறத்தலையும், அவ்வாறு இறந்தவர்களுக்கு நடுகல் அமைத்து மக்கள் வழிபட்டனர் என்பதையும் புலப் படுத்துகிறது. சோழ மன்னன் கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்ததையும், அவனது ஆருயிர் நண்பர் பிசிராந்தையாருக்கும் வடக்கிருத்தலுக்காக இடம் ஒதுக்கும்படி கேட்டுக்கொண்டதையும், பின்னர் பிசிராந்தையாரும் மன்னன் கூறியவாறே அங்கு வந்து வடக்கிருந்ததையும், வடக்கிருந்து உயிர்துறந்த கோப்பெருஞ் சோழனுக்கு நடுகல் எடுக்கப்பட்டதையும் புறநானூற்றின் பாடல்கள் தெரிவிக்கின்றன.[1] வடக்கிருந்து உயிர்துறந்தார்க்குக் கல்நட்டு வழிபடும் வழக்கம் கி.பி. முதலிரண்டு நூற்றாண்டளவிலேயே இருந்திருக்கிறது என்பதை இதன் மூலம் நாம் உணரலாம்.

## கபிலர் கல்

பெரும்புலவர் கபிலர், வள்ளல் பாரியின் மகளை மலையமான் அரசனுக்கு மணமுடித்து வைத்துவிட்டு திருக்கோவிலூரில் தீப்பாய்ந்து உயிர் நீத்தார் என்றும் அவர் உயிர் நீத்த இடமான கற்பாறை 'கபிலர் கல்' என்று அழைக்கப்பட்டது என்றும் திருக்கோயிலூரில் காணப்பெறும் முதலாம் இராஜராஜன் காலத்தியக் கல்வெட்டு ஒன்று தெரிவிக்கிறது:

"மொய் வைத்தியலு முத்தமிழ் நான்மைத்
தெய்வக் கவிதைச் செஞ்சொற் கபிலன்
மூரிவண் தடக்கை பாரிதன டைக்கலப்
பெண்ணை மலையற் குதவிப் பெண்ணை
அலைபுனல் அழுவத்து அந்தரிட் சம்செல
மினல்புகும் விசும்பின் வீடுபே றெண்ணி
கனல்புகும் கபிலக் கல்லது......"

என்பதாகும் அப்பகுதி.

சங்கப் புலவன் கபிலன் தீப்பாய்ந்து உயிர்நீத்த இடத்தை நினைவுக் கல்லாகக் கொண்டு சுமார் ஆயிரம் ஆண்டுகட்குப் பின்னர் வாழ்ந்த மக்களும் போற்றினர் என்பதை இப்பாடற்கல்வெட்டின் மூலம் அறியலாம். ஆதலால் வடக்கிருந்து உயிர் நீத்தாருக்கும், அனல் புகுந்து உயிர் துறந்தார்க்கும், உண்ணா நோன்பிருந்து மடிந்தார்க்கும் நினைவுக் கல், அல்லது நினைவுச் சின்னம் அமைப்பது பண்டைய மரபு என்பது தெற்றென விளங்கும்.

## ஈரெட்டி மலைக் கல்வெட்டு

நாம் தொடக்கத்தில் கண்டுள்ள ஈரெட்டிமலைக் கல்வெட்டில் காணப் பெறும் செய்தியும் இத்தகைய ஒரு நிகழ்ச்சியைத்தான் தெரிவிக்கிறது என்பதை எளிதாகப் புரிந்துகொள்ளலாம்.

'துறகயுள்ளாரு கல்' என்று இப்பொழுது படிக்கப்பட்டுள்ளது. இதன் படி பொருள்கொண்டால் துறவறத்தில் உள்ளார் ஒருவருடைய கல் என்று பொருள்படுகிறது. இது நிகழ்காலச் செயலை உணர்த்துவதாக உள்ளது. அவர் துறவு பூண்டு உண்ணா நோன்பு இருந்தபோதே கல் அமைக்கப்பட்டு இருக்கலாமோ என்று எண்ணத் தோன்றுகிறது. இனி அவர் உயிர் நீப்பவர் தான் ஆதலால் கல் அமைத்திடுவோம் என்று மக்கள் அமைத்து விட்டார்களோ என்றும் கருதலாம். துறகய் என்பது துறக்கத்தைக் குறிக்கிறது என்று பொருள் கொண்டால் 'விண்ணுலகத்தில் உள்ளாரு' என்று கொள்ளலாம்.

கல்வெட்டு:



## கல்வெட்டின் காலம்

கல்வெட்டின் எழுத்தமைதி, பூலாங்குறிச்சி கல்வெட்டுக்கு முந்தைய தாகவும், அரச்சலூர்க் கல்வெட்டுக்குப்[7] பிந்தையதாகவும் காணப்படுகிறது. ஆதலால் இக்கல்வெட்டு கி.பி. நான்காம் நூற்றாண்டைச் சார்ந்தது என்று கூறலாம். முதல் வரியில் உள்ள 'க' வடிவத்திக்கும் இரண்டாம் வரியில் உள்ள 'க' வடிவத்துக்கும் வேறுபாடு காணமுடிகிறது. 'க' வில் உள்ள குறுக் குக்கோடு இரண்டாம் வாயில் உள்ள 'க' வில் வளைய ஆரம்பித்துள்ளது. மேலும் 'ள' 'ல' எழுத்துக்களும் வளர்ச்சி பெற்றுள்ளன. ஆதலால் தமிழியிலி ருந்து வட்டெழுத்தாக மாற்றமடையும் காலக்கட்டம் என உறுதியாக நம்பலாம்.

## கல்வெட்டுச் சிறப்பு

தமிழ்நாட்டில் இதுவரை கிடைத்துள்ள நினைவுக்கல் கல்வெட்டுக் களிலே இது மிகப் பழமையானதாகும். கி.பி. 5-ஆம் நூற்றாண்டிலிருந்து பல நடுகல் கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன.[8] இவற்றிலெல்லாம் வீரன் ஆநிரை மீட்டபொழுதும், 'ஆ' நிரை கவர்ந்த பொழுதும் இறந்துபட்ட செய்தியைத்தான் காணமுடிகிறது. ஆனால் இவ்விரெட்டிமலைக் கல்வெட்டில் தான் துறவு மேற்கொண்ட ஒருவர் இறந்ததற்காகக் கல் அமைத்த செய்தி கூறப்பட்டுள்ளது. ஆதலானும் இக்கல்வெட்டு முக்கியத்துவம் பெறுகிறது.

அடிக்குறிப்புகள் :

1. அ. பழனியப்பன், தமிழாசிரியர், அரசு ஆண்கள் உயர்நிலைப்பள்ளி, பவானி-அவர்கள் இக்கல்வெட்டு பற்றிய செய்தியை முதன் முதல் இத்துறைக்குத் தெரிவித்தார்.
2. அ. இராசேந்திரன், கல்வெட்டாய்வாளர், இரா. செல்வராஜ் காப்பாளர். ஆகியோர் இக்கல்வெட்டைப் படியெடுத்ததோடு அல்லாமல் அக்கல்லையே பாதுகாப்பாகத் துறைக்குக் கொண்டு வந்துள்ளனர்.
3. S.I.I. Vol. No. 262. இதே இடத்தில் கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டு ஒன்றும் (238 of 1904) ஒருவர் உண்ணா நோன்பு இருந்து உயிர் துறந்த செய்தியைத் தெரிவிக்கிறது.
   "முப்பது நாளனசன நோ[ற்]ற
   இ[ளை]ய படாரர் நிசிதிகை
4. புறம் 214-221.
5. S.I.I. Vol. VII No. 863.
6. அ. இராசேந்திரன், 'தொல்லியல் கருத்தரங்கு' தொல்பொருள் ஆய்வுத்துறை, பக்கம் 157-165
7. இரா. நாகசாமி, 'செங்கம் நடுகற்கள்' தொல்பொருள் ஆய்வுத்துறை, 1972.

*

# நெற்குப்பைச் செப்பேடு

மா. செந்தில்செல்வகுமரன், எம்.ஏ.
தொல்பொருள் அலுவலர், திருநெல்வேலி

இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம் நெற்குப்பை என்ற ஊரில் திரு. பொய்யாமொழி என்பவரிடமிருந்து பெறப்பட்ட செப்பேட்டு நகலில் காணப்படும் செய்தி முறையூரில் காட்டுப்புலவர் என்பவரிடம் சேகரிக்கப்பட்ட ஓலைச்சுவடியில் காணப்படும் செய்தியோடு ஒப்பிட்டுக் கூறப்படுகிறது. அவ்வோலைச்சுவடியில் வெண்டேர் செழிய பாண்டிய ராச புதல்வன் கூளைப்பாண்டியன் என்ற ஒரு பாண்டிய மன்னன் குறிப்பிடப்படுகிறான். இம்மன்னனின் ஆளுகையின்கீழ் **பதிக்கோட்டை** என்ற பகுதியிலிருந்து ஆண்டு வந்த **பொன்னன், அமரன்** என்ற இருவரும் இம்மன்னனுக்குப் பகுதிப் பணம் கொடுக்க மறுத்தனர். கூளைப்பாண்டியன் இவ்விருவர்மீதும் படையெடுத்துச் சென்று தோற்றுத் திரும்புகிறான்.

பின்பு பொன்னன், அமரன் இருவரையும் அடக்கக் கூளைப்பாண்டியன் தான் பகுதிப்பணம் கட்டும் சேர அரசன் **ரவிகுப்த சேரதேவ பாண்டியனின்** உதவியை நாடுகிறான். ரவிகுப்த சேரதேவ பாண்டியன் தம் இளைய மக்களாகிய **பராக்கிரமபாண்டிய தேவன், மாமறைத்தேவன், வீரபாண்டிய தேவன், விக்கிரமபாண்டியத்தேவன், செயவேளத்தேவன்** ஆகிய ஐவரையும், ஐம்பது வலசைப்பேரையும் பாண்டியனுக்கு உதவி செய்யும்பொருட்டு அனுப்பி வைக்கிறான். இந்த ஐவரும் படையுடன் வந்து பொன்னன், அமரன் இருவரையும் போரில் வென்று அடக்குகிறார்கள். இந்த ஐவரின் வெற்றிகண்டு மகிழ்ந்த கூளைப்பாண்டியன், ஐம்பது வலசைப்பேர்களில் ஐவரின் பெண்ணை இந்த ஐவருக்கும் மணம் செய்து வைக்கிறான். மேலும் கூளைப்பாண்டியன் தம் நாட்டின் சில வளமான பகுதிகளை இந்த ஐவருக்கும் வழங்கி, அவர்களை இங்கேயே தங்கி இருக்குமாறு வேண்டுகிறான். அவர்களும் பாண்டிய மன்னனின் வேண்டுகோளுக்கிணங்கித் தமக்கென்று வழங்கப்பட்ட பகுதிகளை ஆண்டு வந்தனர். இந்த ஐவருக்கும் வழங்கப்பட்ட பகுதிகள் **முல்லைமங்கலம், சதுர்வேதிமங்கலம், சீர்சேந்தமங்கலம், கன்னமங்கலம், வேலமங்கலம்** என அழைக்கப்பட்டன. மேலும் இந்தப் பகுதிகள் **ஐந்து நிலை நாடுகள்** எனவும் அழைக்கப்படுகின்றன.

ஐந்து நிலை நாட்டுத் தலைவர்களில் ஒருவன் தன் நாட்டு நிர்வாகத்தைக் கவனித்துக்கொள்ள ஒவ்வொரு நாட்டிலிருந்தும் ஒரு திறமையான ஆளைக் கொண்டுவந்து தம் நாட்டுக் காணியாட்சியாக நியமிக்கிறான். இந்த ஐந்து அம்பலக்காரர்களுக்கும் அவர்கள் செய்யும் பணிக்காக நிலம் வழங்குகிறான். அவர்களுக்காக வழங்கப்பட்ட நிலம்பற்றி இச்செப்பேடு குறிப்பிடுகிறது.

செப்பேடு சகாப்தம் 1389 ஆம் (கி.பி. 1467) ஆண்டினைக் குறிப்பிடு கிறது. கார்கார்த்தவேளார், கரைச்சீட்டுப் போட்டு, களக்கோட்டை ராயன் பட்டமான மங்காத்தார் பாண்டியன் தேவன் உள்ளிட்டாற்கும், நேதிராயப் புரை உள்ளிட்டாற்கும், கண்டிபதேவன் உள்ளிட்டாற்கும், வீரமுடிகாங்கேய தேவன் உள்ளிட்டாற்கும் ஆக நான்கு புரையமாற்கும் வழங்கிய நிலம்பற்றி குறிப்பிடுகிறது.

தற்பொழுது இவ்வூரார், காணியாளவந்த சோழப்புரையர், அஞ்சாத கண்டப்புரையர், வணங்கனாத்தேவன், தொண்டைமான் அம்பலம், சொக்கட் டான் அம்பலம் என ஐந்து அம்பலகாரர் இருந்ததாகக் குறிப்பிடுகின்றனர். இந்த ஐந்து அம்பலகாரர்களும் தற்பொழுது முறையே முதலியம்பலம், கருப் பையா அம்பலம், மதியாரி அம்பலம், மாலையிட்டான் அம்பலம், சொக் கட்டான் அம்பலம் என அழைக்கப்படுகின்றனர். இவர்கள் முறையே முல்லை மங்கலம், சதுர்வேத மங்கலம், சிர்சேர்ந்த மங்கலம், கன்ன மங்கலம், வேல மங்கலம் என்ற ஐந்து நிலைநாட்டிலிருந்து வந்தவர்கள்.

இச்செய்தியே இவரிடமுள்ள ஓலைச்சுவடி ஒன்றிலும் காணமுடிகிறது. இச்செப்பேட்டு நகலில் காணப்படும் எழுத்தமைதியினைக்கொண்டு பார்க்கும் பொழுது இது 17-ஆம் நூற்றாண்டினைச் சார்ந்ததாகக் கருதலாம்.

செப்பேடு:

1 உ௵ மகா மண்டல் வீசுபரன் அரிய
2 தள விபாடன் பாசைக்கித் தப்பூ மூவர
3 ராய கன்டன் கன்ட னாடு கொண்டு
4 கொன்ட நாடு குடாதான் பாண்டி
5 மண்டலத்தார் அசுபதி கெஷபதி நரபதி
6 தேசு[வின்சு]றிய துரைச்சிய பாரம்ப
7 ன்னி யருளாயி நின்ற சாலிக வாக
8 ன சகாத்தம் 1389 கு மேல்
9 ச் செல்லாயி நின்றெ்ன தாறுன ௵
10 அற்ப்பசி மாதம் 17 தேதி சிய சோள கெம்
11 பீர வளர் நாடாகிய கோனாடு பிறாம
12 லை சூள்ந்த பொன்னமராபதி [நா]ட்டில்
13 பொரு நல்லூரு ஆறை மங்கல[ட்டாற்]
14 கிய பொன்னமரா பதியில் வரிசைலே
15 அருக்கானி யாச்சிக்கி கற்த்தராகிய காருகா
16 ர்த்த வேளாளர் பட்டம் 7கு நத்தம் 705
17 7க்கு குடிக்காடு 1511க்கு விறுமத
18 ராயா 21க்கு தேவதாயம் 212க்கு நா
19 டு 64க்கு தலையூராகிய ஒலியூர் கடத்தம் கா
20 ருக்காத்த வேளாளர் கரைச்சீட்டுப் போ
21 ட்டுக் குடுத்த கானியாச்சி யாவது வரிை

22 ச இவ்வூருக் கானியாச்சிக்கி கற்த்தன்னா
23 க வந்த தெச்சினாபூமிக்கி கற்த்தனாகிய சே
24 து காவல்ப் புரையர்மற் மன்னர் வாள்
25 களக்கோட்டை ராயன் பட்டமான மங்கா
26 த்தார் பாண்டியர் தேவன் னுள்ளிட்டார்க்கும்
27 நேதிராயப் புரை உள்ளிட்டாற்கும் கன்டி
28 ய தேவன் நகுலராயன் னுள்ளிட்டாற்கு
29 ம் வீரமுடி காங்கய தேவன் னுள்ளிட்ட
30 ாற்கும் ஆ[க]. ரை 4[க்கு] கரைப் புரையர்மா
31 ற் மன்னருக் குடுத்த கானியாச்சி யாவ
32 து ராயமானிய ராயதுரை யவகள் சவு
33 ந்திர பான்டிய ராசர்ப்புரி எறி எல்லைக
34 பட அலவை கல் நட்டபடிக்கி கீள் பாற்
35 க் கெல்லை பாற்க் குண்டு புள்ளை யாரடியி
36 ல் கல்லுச் சூலத்துக்கு நத்த பிஞ்சை
37 க்கும் மேற்க்கு தென்ம் பாற்க் கெல்[லை]
38 கொட்டை புறக்கிப் படு பாறை புள்ளடி
39 நிலை கல்லு கன்னாயிரபுரம் செங்கல்
40 ...பிஞ்சைக்கும் வடக்கும் மேல்பாற்க்செ
41 [க]ல்லை கிளக் கோட்டை தலைவாசல்லு
42 க்குக் கிளக்கு வடபாற் கெல்லை மத்தி
43 ல் படுபாறை புள்ளடி ச . . கடிச . . ரம்
44 நிலைகல்லுக்கும் தெற்கு யிந்த நாங்
45 கெல்லைக் குள்ளாகியது மன்னு மனை
46 கோவில்க் குளம் யிடையில் அம்
47 பலம் உம்பளம் யிந்த நாலுவகை
48 ப்புரையர் ஆண்டு கொள்ளுவது யிப்
49 படிக்கி குடுமிமலை கொத்தன் வலக்
50 குறிச்சிமலை கன்னிமலை பூவாலைக்
51 குடிமலை பூலாம் குறிச்சிமலை ஆன்டி
52 ரமடம்டம் கல்வெட்டு தாம்பூர சா
53 தனம் குடுத்தபடி கல்லு புல்லு பூமி
54 சந்திரன் சூரியன் உள்ளவரை
55 யில் ஆள்வது யிப்படி ஷெி யூர் நாட்
56 டு கணக்கு ஆறுகாத வட்டகைமூ
57 வேந்திர வேளார் சொல்ப்படித்தி
58 ருப்பூ அளகிய நாயகி ஒலியவ
59 ள் துணை உ

*

# கோச்செங்கணானின் மாடக் கோயில்கள்

டாக்டர். இரா. கலைக்கோவன்
*திருச்சி*

கோச்செங்கணானின் மாடக் கோயில்களை நமக்கு அறிமுகப்படுத்திய பெருமை சம்பந்தர், அப்பர், சுந்தரர், திருமங்கையாழ்வார் ஆகிய நான்கு பேரைச்சாரும். இவர்கள் தமிழகத்துக் கோயில் கட்டிடக்கலையில் நிகழ்ந்த புரட்சிகரமான மாறுதலைப்பற்றித் தத்தம் சமய இலக்கியங்களில் தெளிவாகச் சொல்கின்றனர். தமிழகத்தில் முதலில் மரத்தால் கோயில்கள் அமைக்கப்பட்டன. பிறகு களிமண்ணால் சுவரெடுத்து மரத்தால் கூரை வேயப்பட்ட களிமண் கோட்டங்கள் எழுந்தன. அதன்பின் செங்கல், சுண்ணாம்பு இவற்றால் சுடுமண் ஓங்கிய நெடுநிலை மாடங்கள் கட்டப்பட்டன. இச்சங்க காலத்துக் கோயில்கள் பற்றியும், அவற்றின் அழிவைப் பற்றியும் சங்க இலக்கியங்கள் உணர்த்துகின்றன. கி.பி. மூன்றாம் நூற்றாண்டு வரையில் கோயில் கட்டப் பயன்படுத்தும் பொருள்களில்தான் மாற்றம் இருந்தது. கோயில் அமைப்பு முறையில் பெரும் மாறுதல்கள் தோன்றவில்லை. கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்ததாகக் கருதப்படும் கோச்செங்கணான் கோயில் கட்டிட அமைப்பு முறையில் புரட்சிகரமானதொரு மாறுதலைச் செய்வித்தான். அதுவரையில் தரை மட்டத்தில் 'கோட்டங்கள்' என்ற பெயரில் அமைந்திருந்த கோயில்களை உயர்த்தி, மேடை போன்றதொரு உயர்ந்த தளத்தின்மீது கோயிலை அமைத்து மாடக் கோயில்களாக்கி மகிழ்ந்தான்.

இறைவனுக்கு அப்பெருமான் எடுப்பித்த இம்மாடக் கோயில்களைப் பற்றி, திருமங்கையாழ்வார் தன் பெரிய திருமொழியில் பெருமை படக் கூறுகிறார். இதையே, திரு அடைவுத் திருத்தாண்டகத்தில் அப்பர் அடிகள்:

'பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்'
பெருங் கோயில் எழுபதினோ டெட்டும்,

என்று கோச்செங்கணான் எடுப்பித்த கோயில்களின் எண்ணிக்கையைக் கூறி மகிழ்கிறார்.

சோழ வளநாட்டில் எடுப்பிக்கப்பட்ட இம்மாடக் கோயில்கள் பெருந் திருக்கோயில்கள் அல்லது பெருங் கோயில்கள் என்றும் அழைக்கப்பட்டன. இவற்றில் இரண்டு விதமான அமைப்பு முறைகள் காணப்படுகின்றன. சில மாடக் கோயில்கள் இரண்டுதள அமைப்புடனும், சில மூன்றுதள அமைப் புடனும் காணப்படுகின்றன. இரண்டுதள மாடக் கோயில்களில், அவற்றின் முதல்தள அடிப்பாகமான துணைத்தளம், தாங்குதளம் என்ற பகுதிகள்

மட்டும் வழக்கமான உயரத்தைவிட ஓரிரு மடங்குகள் அதிக உயரத்தில் அமைக்கப்பட்டு மேடை போன்றதொரு நிலையை அடைந்துள்ளன. இம் மேடைமீது கருவறையும், அதன்மீது இரண்டாம் தளமாக விமானமும் அமைக்கப்பட்டுள்ளன. இதற்கு எடுத்துக்காட்டாகத் திருவைகல் மாடக் கோயில், தண்டலை நீணெறிநாதர் மாடக்கோயில், நன்னிலம் பெருங்கோயில் அப்பர் பெருந்திருக்கோயில் முதலியவற்றைச் சொல்லலாம்.

மூன்று தள மாடக் கோயில்களில், முதல் தளமே மீண்டும் ஒரு முறை இரண்டாம் தளமாக அமைந்து, விமானம் மூன்றாம் தளமாக அமைக்கப் பட்டுள்ளது. அதாவது முதல் தளத்தின் கடைசிப் பகுதியான கொடுங்கைக்கு மேலுள்ள யாளி வரிமானத்தின்மேல் மீண்டும் தாங்குதளம் தொடங்கி யாளி வரி, பலகை, தெய்வப்புரை, போதிகை முதலிய முதல் தள உறுப்புக்களே இரண்டாம் முறையும் அமைக்கப்பட்டு அதன்மீது மூன்றாம் தளமாக விமானப் பகுதி அமைக்கப்பட்டுள்ளது. கீழ்வேளூர், தலைச்சங்காடு, தேவூர், வலிவலம் முதலிய மாடக் கோயில்களை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்

கோச்செங்கணான் காலத்தில் எளிய அமைப்பு முறையிலான மாடக் கோயில்களே எழுப்பப்பட்டிருக்கவேண்டும். அவை செங்கல்லால் கட்டப் பட்டவையாதலால் காலப்போக்கில் அழிவுற்றன. பின்னால் வந்த பேரரசர்கள் திருப்பணிகள் இவ்வமைப்பு முறையில் பல மாறுதல்களைத் தோற்றுவித்ததன் விளைவே இன்று நாம் காணும் அமைப்பு முறைகள். கோச்செங்கணான் கட்டிய தாகக் கருதப்படும் எழுபதுக்கும் மேற்பட்ட இம்மாடக் கோயில்களுள் இன்று காணக் கிடைப்பவை மிகச் சிலவே. இதுவரை பதினாறு மாடக்கோயில்களைக் கண்டறிந்து பார்வையிடும்வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இவற்றுள், திருச் சாய்க்காடு, தலைச்சங்காடு, ஆக்கூர், அம்பர், திருமருகல், நன்னிலம், குடவாசல், திருவைகல், பழையாறை, திருநல்லூர், தண்டலை, வலிவலம், தேவூர், கீழ்வேளூர் முதலிய பதினான்கு தலங்களில் உள்ள கோயில்கள் சிவபெரு மானுக்காக எழுப்பப்பட்டவை. திருநறையூர், தலைச்சங்காடு என்னும் இரண்டு தலங்களில் உள்ள மாடக்கோயில்கள் திருமாலுக்காக எழுப்பப் பட்டவை. இப்பதினாறு கோயில்களில் ஒன்று காவிரிக்கு வடகரையிலும், பதினைந்து காவிரிக்குத் தென்கரையிலும் அமைந்துள்ளன. திருமாலுக்குரிய ஆலயங்கள் இரண்டையும் திருமங்கையாழ்வார் தமது பெரிய திருமொழியிலும் திருமடலிலும் பாடியுள்ளார். சிவப்பதிகள் பதினான்கனுள் பழையாறை நன்னிலம் தவிர ஏனைய பன்னிரண்டு பதிகளைப் பாடிய பெருமைக்குரியவர் சம்பந்தர் பெருமான். அப்பர் அடிகள் ஏழு தலங்களைப் பாடியுள்ளார். அவற்றுள் சம்பந்தரும், சுந்தரரும் பாடாதது பழையாறைத் தலம். வாலிவலம், நன்னிலம் மாடக் கோயில்களைப்பற்றி மட்டுமே சுந்தரர் குறிப்பிடுகிறார்.

சிவபெருமானுக்குரிய பதினான்கு தலங்களில் ஐந்து தலங்கள் சேக்கிழார் பெருமானால் நாயன்மார்களுடன் தொடர்புடைய தலங்களாகக் குறிக்கப்படு கின்றன. இவற்றுள் பூம்புகாருக்கு அருகிலுள்ள திருச்சாய்காட்டில்தான் இயற்பகை நாயனார் தன்மனைவியை அடியாராக வந்து கேட்ட இறைவனுக்குக்

கொடையாகக் கொடுத்தது. திருநல்லூரில் அமர்நீதி நாயனார் இறைவன் தந்த கீழாடையைத் தொலைத்துவிட்ட குற்றத்திற்காகக் குடும்பத்துடன் தராசுத் தட்டில் ஏறி அருள்பெற்றார். ஆக்கூரில் தம்மிடம் வந்த அடியவர் களுக்கு உணவளித்தே இறையருள் பெற்ற சிறப்புலி நாயனார் வாழ்ந்திருந்தார். திரு அம்பருக்கு அருகில்தான் சோமாசிமாற நாயனாரின் யாகசாலை இருந்த தாகச் சேக்கிழார் பாடுகிறார். அரிவாட்டாய நாயனாரை ஆட்கொண்டு இறைவன் அருள்புரிந்த இடமே தண்டலை நீள்நெறி.

இம்மாடக் கோயில்களில், சாயாவனம், தலைச்சங்காடு சிவன் கோயில், தலைச்சங்காடு பெருமாள் கோயில், திருவைகல், தண்டலை நீள்நெறி முதலிய ஆலயங்கள் கோபுரமற்ற நுழைவாயிலைக் கொண்டவை. திருமருகல், திருநறையூர் நாச்சியார் கோயில், அம்பர், ஆக்கூர், தேலூர், கீழ்வேளூர், நல்லூர் முதலிய ஆலயங்கள் அழகிய மூன்று அல்லது ஐந்து நிலைக் கோபுரங்களை உடையவை. இவற்றுள் கீழ்வேளூர், நாச்சியார் கோயில் கோபுரங்கள் அற்புதமான சிற்ப வேலைப்பாடுகளைக் கொண்டவை. நன்னிலம், குடவாசல், வலிவலம் முதலிய இடங்களிலுள்ள கோயில்கள் சிறிய ஒரு நிலைக் கோபுரத்தை உடையவை. பழையாறைக் கோயிலின் கோபுரம் சிதைந்த நிலையில் உள்ளது.

பதினேழு மாடக்கோயில்களுள் திருவைகல், தண்டலை நீணெறி, நன்னிலம் என்னும் மூன்றும், இன்றும் செங்கல் திருப்பணிகளாகவே உள்ளன. ஏனையவை கருங்கல் திருப்பணிகளாக மாறியுள்ளன. இவற்றுள் மிக எளிய அமைப்புடையவை. திருவைகல், நன்னிலம், தலைச்சங்காடு நாண்மதியப் பெருமாள் கோயில் என்பவை. இப்பெருமாள் கோயிலின் தாங்குதளத்தில் கல்வெட்டுக்கள் அழிந்த நிலையில் காணப்படுகின்றன. இங்கு படியெடுக்கப் பட்ட கல்வெட்டுக்களில் பழமையானது வீரபாண்டியன் தலைகொண்ட பரகேசரிவர்மரான இரண்டாம் ஆதித்தனின் மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டாகும்.

சிவனுக்குரிய மாடக்கோயில்கள் அனைத்திலும் இறைவன் லிங்க வடிவத்தில் எழுந்தருளியுள்ளார். இரண்டு இடங்களில் லிங்கத் திருமேனிகள் சில சிறப்பம்சங்களுடன் அமைந்துள்ளன. ஆக்கூர் தான்தோன்றிமாடத்தில் இறைவன் லிங்கத் திருமேனியின் மேற்பகுதியில், குறுக்கு வாக்கில் ஒரு வெட்டுக் காணப்படுகிறது. இவ்வெட்டினால் லிங்கத்தின் மேல்பகுதியில் பிளவேற்பட்டு இருபகுதிகளாய்க் காட்சியளிக்கிறது. நல்லூரில் லிங்கத் திருமேனி மிக மெல்லிய நீண்ட வடிவினதாகக் காட்சியளிக்கிறது. இதில் பல துளைகள் உள்ளன.

இம்மாடக்கோயில் தலங்களில் பெரும்பாலானவற்றில் அம்மனுக்கு மாடக்கோயில் அமைப்பற்ற தனி ஆலயங்கள் அமைந்துள்ளன. நல்லூரிலும் அம்பரிலும் அம்மன் கோயில்கள் தனித்திருந்தாலும், மாடக்கோயில் கருவறை யில் இறைவனுடன் இறைவியும் இருப்பதைக் காண்கிறோம். சாயாவனத்தில்

இறைவனும் இறைவியும் மாடக்கோயிலில் தனித்தனிக் கருவறைகளில் எழுந்தருளியுள்ளனர்.

இம்மாடக் கோயில்களுள் சிற்பச் சிறப்புடையது கீழ்வேளூர் கேடிலியப்பர் ஆலயமே. இக்கோயிலின் வெளிமதில் சுவர் முழுவதும் நந்தி திருவுருவங்களும், சிவபெருமானின் பல திருவிளையாடல்களைக் குறிக்கும் சிற்பங்களும் செதுக்கப்பட்டுள்ளன. இக்கோயிலின் வெளித் திருச்சுற்றின் மேற்குப்புறச் சுவரில் மராட்டிய மன்னர்கள் இருவரின் திருவுருவங்களும், மராட்டிய மொழிக் கல்வெட்டும் உள்ளன.

திருநல்லூர் மாடக்கோயிலில் உள்ள செப்புத்திருமேனிகள் சோழர் காலத்தவை. ஆடவல்லான், அகத்தியர், பிள்ளையார் உருவங்கள் காணத் தக்கவை. அம்பர் திருக்கோயிலிலும் ஆக்கூரிலும் உள்ள செப்புத் திருமேனிகளும் அழகு பொருந்தியவை. கீழ்வேளூரில் வலது திருவடியைத் தூக்கியாடிய நடராசர் திருமேனி அமைந்துள்ளது. பெரும்பாலான மாடக்கோயில்களில் சோமாஸ்கந்தருக்கென்று தனித் திருமுன் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. நடராசருக்கென்றும் தனித் திருமுன்கள் பலகோயில்களில் அமைந்துள்ளன. அவற்றுள் சிறப்பானது ஆக்கூர். சபாநாயகர் சன்னதி என்று சிறப்போடு அழைக்கப்பெறும் இத்தனிக்கோயிலின் கட்டிட வேலைப்பாடு சொல்ல வொண்ணாச் சிறப்புடையதாகும். இதன் தாங்குதள அமைப்பும், யாளி வரிமானமும், வரிமானம் கூடுமிடத்திலுள்ள சிற்பங்களின் எழிலும் கண்டு மகிழத்தக்கவை. தலைச்சங்காடு சிவன்கோயிலில் உள்ள சேட்டை தேவியின் தனிச்சிற்பம் பழமையானதும்; அழகானதுமாகும். கோச்செங்கட் சோழனின் சிற்பம் அம்பர், தேலூர், ஆக்கூர், நல்லூர், தண்டலை நீணெறி போன்ற பல இடங்களில் தனிச்சிறப்புடன் அமைக்கப்பட்டுள்ளது.

இக்கோயில்களில் கல்வெட்டுக்கள் கிடைக்கப் பெறாத கோயில்களாகத் தண்டலை நீணெறி, திருவைகல் முதலிய கோயில்களைக் குறிப்பிடலாம். அதிக அளவில் கல்வெட்டுக்கள் கிடைத்த இடம் சாயாவனம். சரியான காலக் கணிப்பு செய்ய இயலாதபடி சிதைந்த கல்வெட்டுக்கள் நன்னிலம் மதுவனேசுவரர் கோயிலில் கிடைத்துள்ளன. இக்கோயில்களில் கிடைத்த கல்வெட்டுக்களில் பெரும்பாலானவை இரண்டாம் இராசாதிராசன், மூன்றாம் இராசராசன் காலத்தனவாகும்.

இம்மாடக்கோயில்களுள் சாயாவனம், பூம்புகார் செல்லும் வழியிலும், தலைச்சங்காடு, ஆக்கூர் என்பன பூம்புகாரிலிருந்து தரங்கம்பாடி செல்லும் வழியிலும், அம்பர் பேரளத்துக்கு அருகிலும் அமைந்துள்ளன. நன்னிலம், திருமருகல், நாச்சியார் கோயில், குடவாசல் முதலிய தலங்கள் கும்பகோணத்திலிருந்து திருவாரூர் செல்லும் வழித்தடத்தில் அமைந்துள்ளன. திருநல்லூர், பழையாறை என்னும் இடங்கள் பாபநாசத்திலிருந்து குடந்தை செல்லும் வழியில் உள்ளன. திருத்துறைப்பூண்டியில் இருந்து திருவாரூர் செல்லும் பாதையில் தண்டலைநீணெறி, வலிவலம், தேலூர், கீழ்வேளூர் முதலிய கோயில்கள் அமைந்துள்ளன.

கி.பி ஐந்தாம் நூற்றாண்டில் கோச்செங்கட்சோழனால் எழுப்பப்பட்ட இம்மாடக்கோயில்கள் தமிழகத்தின் கலைவரலாற்றில் திருப்புமுனையாக அமைந்தவை. பிற்காலக் கோயில் அமைப்பு முறைகளுக்கு அடிப்படையாக நின்றவை. ஆறாம் நூற்றாண்டைத் தொடர்ந்து வந்த பல்லவர்களும், சோழர்களும், பாண்டியர்களும், நாயக்கர்களும், மராட்டியர்களும் பார்த்துப்பார்த்து வியந்து, பல்வேறு திருப்பணிகள் செய்து மகிழ்ந்தவை. எழுபதுக்கும் மேலாக எழுப்பப்பட்டு இன்று இருபதுக்கும் கீழாக எஞ்சிநிற்கும் இக்கலைப் பெட்டகங்களை- மலைக்க வைக்கும் இம்மாடக்கோயில்களைப் போற்றிப் பாதுகாப்போம்.

★

# ரோமானியர் குடியிருப்பு

இராமநாதபுரத்துக்கு அருகில் வைகையாறு கடலோடு கலக்குமிடத்தில் அழகன் குளம் என்னும் ஊர் உள்ளது. இவ்வூருக்கு மேற்கே உள்ள கோட்டை மேடு பகுதி சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்னர் ரோமானியரின் குடியிருப்புப் பகுதியாக விளங்கியிருக்கிறது.

இதற்குச் சான்றாக இம்மேட்டில் அதிக அளவில் ரோமானியர் பயன் படுத்திய ரவுலட்டட், அரிட்டையின் வகைப் பானைஓடுகளும் ஆம்பொரா (மதுச்சாடிகளின்) பகுதிகளும் கிடைக்கின்றன. சங்கு வளையல் துண்டுகளும், வளையல்களுக்காக அறுத்தது போக எஞ்சிய சங்குப் பகுதிகளும், முழுசங்குகளும் ஏராளமாக கிடைத்துள்ளன. ஈதன்றிப் பலவண்ணக்கற்களாலான மணிகளும் இங்கு கண்டெடுக்கப்பட்டுள்ளன. இந்த இடத்தில் அகழ்வாய்வு செய்ய இத்துறை உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

பொன். அரசு

# சுதைப் பொருட்களைச் சுத்தம் செய்யும் முறை

பி. ரவிசங்கர், பி.எஸ்ஸி,பி.எல்.
உதவி இரசாயனர்
தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை-28

அக்காலத்தில் சுண்ணாம்புடனும், செங்கல்லுடனும் வெல்லப்பாகைக் கலந்து சுதைப் பொருள்களைத் தயார் செய்தனர்.

## சுதைப் பொருள்கள் பாழடைதல்

காற்றில் உள்ள சல்பர்-டை-ஆக்ஸைடு என்ற அமில வாயு ஈரப்பசையுடன் சேர்ந்து சுதைப் பொருளில் உள்ள கால்சியம் கார்போனேட்டை கால்சியம் சல்பேட்டாக மாற்றிச் சுதைச் சின்னங்களின் தோற்றத்தையும், திண்மையையும் படிப்படியாகச் சிதைக்கிறது. சுதைப்பொருட்கள் பூமிக்குள் புதையுண்டு இருக்கும்போது மண்ணிலிருக்கும் கரையும் தன்மையுள்ள உப்புக்களை உறிஞ்சிக் கொள்ளும். இதனாலும் சுதைப் பொருள்கள் சிதைகின்றன.

## வழக்கில் உள்ள சுத்திகரிப்பு முறை

கரையும் தன்மையுள்ள உப்புக்களை எப்படிச் சுதைப் பொருள்களிலிருந்து வெளியேற்றுவது என்பதை இங்கே காண்போம். முதலில் சுதைப் பொருட்களில் இருக்கின்ற அழுக்குகளை நீரினால் கழுவிச் சுத்தம் செய்ய வேண்டும். பிறகு ஏதாவது கறைகள் இருந்தால் அவைகளை ஒரு மிருதுவான தூரிகையினால் சுத்தம் செய்ய வேண்டும். பிறகு காய்ச்சி வடித்த குளிர்ந்த நீரில் சுதைப் பொருள்களை வைத்து மிதமான சூட்டில் சூடுபடுத்த வேண்டும். இதனால் கரையும் தன்மையுள்ள உப்புக்கள் கரைந்து விடும். பிறகு வெள்ளி நைட்ரேட் சோதனையின் மூலம் குளோரைடு போன்ற உப்புக்கள் முழுவதும் அகன்று விட்டதா என்று பரிசோதனை செய்ய வேண்டும். இப்படிச் செய்வதற்குக் குறைந்தது ஆறு வாரங்கள் ஆகும்.

## திண்மை இழந்த சுதைப் பொருட்களைச் சுத்தம் செய்தல்

காய்ச்சி வடித்த குளிர்ந்த நீரில் வடிதாளைப் போட்டுக் கூழ் செய்து கொள்ள வேண்டும். பிறகு அந்தக் கூழைச் சுதையின் மேற்பரப்பில் தடவி வைக்கவேண்டும். இவ்வாறு செய்வதால் கூழில் உள்ள ஈரத்தைச் சுதைப் பொருள்கள் உறிஞ்சியபின் காகிதக்கூழ் ஒரு மெல்லிய அடையைப்போல் தோற்றம் அளிக்கும்.

சுதையினால் உறிஞ்சப்பட்ட நீரினால் கரையும் தன்மையுள்ள உப்புக்கள் மேற்பரப்பிற்கு கொண்டுவரப்பட்டு ஆவியாதல் நடைபெறுகிறது. இதை 4 வாரங்கள் தொடர்ந்து செய்யவேண்டும். பிறகு இக்காகிதக்கூழைக் காய்ச்சி வடித்த குளிர்ந்த நீரில் கரைத்து குளோரைடு சோதனைச் செய்யவேண்டும்.

## திண்மையாக்கும் முறை

திண்மையற்ற சுத்தம் செய்யப்பட்ட சுதைப் பொருட்களை 2 விழுக்காடு நைலான் பாலிமரைக்கொண்டு காற்று அழுத்தத்தின்மூலம் (vaccum impregnation) ஊடுருவச்செய்து திண்மை உண்டாக்குகின்றனர். இதையே பாது காப்புப் பூச்சாகவும் உபயோகப்படுத்துகின்றனர். இது தான் பொதுவாக சோதனைச் சாலைகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சுத்திகரிப்பு முறையாகும். இனிவரும் சுத்திகரிப்புமுறை நம் சோதனைச் சாலையில் மேற்கொள்ளப்படுவதாகும்.

## திண்மையுள்ள சுதைப் பொருள்களைச் சுத்தம் செய்யும் முறை

முதலில் சுதைப் பொருள்களில் உள்ள அழுக்குகளைத் தண்ணீரில் கழுவ வேண்டும். பிறகு சோப்பு திரவத்தை ஒரு மிருதுவான தூரிகையால் சுதையின் மேற்பால் பூசி மேற்புறமுள்ள கரைகளை நீக்கவேண்டும். பிறகு 10 விழுக்காடு அம்மோனியம் கார்போனேட் கரைசலில் சுதைப் பொருட்களை வைத்து மிதமான சூட்டில் சூடுபடுத்தவேண்டும்.

இவ்வாறு செய்தால் சுதைப் பொருளில் உள்ள கரையும் தன்மையுள்ள உப்புக்களையும், கரையாத உப்புக்களையும், அம்மோனியம் கார்போனேட்டானது கரையும் தன்மையுள்ள கார்ப்பானேட்டாக மாற்றி வெளியே கொண்டு வந்து விடும். இம்முறையை 3 முறை தொடர்ந்து செய்யவேண்டும். பிறகு வெள்ளி நைட்ரேட் சோதனைகளின் மூலம் சுதைப் பொருள்களில் உள்ள குளோரைடு உப்புக்களும் (கரையும் உப்புக்கள்) சல்பேட்டு உப்புக்களும் முழுதும் வெளியேறும் வரை தொடர்ந்து செய்யவேண்டும்.

## திண்மையற்ற சுதைப் பொருள்களைச் சுத்திகரிக்கும் முறை

5 விழுக்காடு அம்மோனியம் கார்போனேட் கரைசலைக் காகிதக் கூழுடன் கலந்து திண்மையற்ற சுதைப் பொருள்களின் மேல் தடவி வைக்கவேண்டும். வாரத்திற்கு ஒருமுறை வீதம் ஒரு மாதத்திற்கு செய்யவேண்டும்.

குளோரைடு உப்புகளும் சல்பேட்டு உப்புக்களும் முழு நிலையில் வெளியேறும்வரை தொடர்ந்து செய்யவேண்டும். பிறகு காய்ச்சி வடித்த குளிர்ந்த நீரால் சுத்தம் செய்யவேண்டும். இவ்வாறு செய்வதால் கார்போனேட் உப்புக்கள் முழுவதும் நீங்கிவிடும். பிறகு 2 விழுக்காடு நைலான் கரைசலை ஆல்கஹாலுடன் கலந்து மேற் பூச்சு பூசி பாதுகாப்பிற்கு அனுப்பவேண்டும்.

# வரலாற்றுக் காலத்துக்கு முந்தைய ஓவியங்கள்

திருமதி. சீ. வசந்தி, எம்.ஏ.,
தொல்பொருள் அலுவலர்,
தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை-28

தென்னார்க்காடு மாவட்டத்தில் திருக்கோயிலூரைச் சுற்றியுள்ள மலைப் பகுதிகளில் சுமார் கி.மு. 2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஓவியங்களைத் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை கண்டுபிடித்துள்ளது. இவை செத்தவரை, ஆலம்பாடி, கொல்லூர், பாடியந்தல் ஆகிய இடங்களில் உள்ள பாறைகளில் காணப்படுகின்றன. கீழ்வாலை என்னும் ஊரில் சில ஓவியங்களை அப்பகுதி ஆசிரியர்கள் சிலர் கண்டு பிடித்துள்ளனர். மேலும், இத்துறை கோவை மாவட்டத்திலுள்ள வேட்டைக்காரன்மலை என்ற இடத்திலும் சில ஓவியங்களைக் கண்டுபிடித்துள்ளது.

## கீழ்வாலை ஓவியங்கள்

விழுப்புரத்திலிருந்து சுமார் 23 கி.மீ. தொலைவில் திருவண்ணாமலைக்குச் செல்லும் வழியில் இவ்வூர் உள்ளது. இங்குள்ள ஓவியங்கள் கற்பாறையில் செங்காவி நிறத்தில் தீட்டப்பட்டுள்ளன. குதிரைமீது அமர்ந்த மனித உருவமும், அதன் அருகில் குதிரையின் கடிவாளத்தைப் பிடித்த நிலையில் உள்ள மற்றொரு மனித உருவமும், அதன் அருகில் முதல் மனிதனுடன் கைகளை இணைத்த நிலையில் உள்ள மற்றொரு மனித உருவமும் தீட்டப் பட்டுள்ளன.

படகில் சில மனித உருவங்கள் பயணம் செய்வதுபோலவும் காணப் படுகின்றன. மேலும் இம்மனித உருவங்கள் நீண்ட மூக்குடன் கூடியனவாக, தலையில் கொம்புடன் தோற்றமளிக்கின்றன. மத்தியப்பிரதேசத்தில் பிம் பெட்கா என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட குகை ஓவியங்களில் உள்ள மனித உருவங்களின் தலைகளிலும் இதேபோன்று கொம்புகள் காணப் படுகின்றன. இந்த ஓவியங்களின் கீழ்புறம் முக்கோணம், சக்கரம் ஒளிக் கதிர்களுடன் கூடிய சூரியன் போன்ற குறியீடுகள் தீட்டப்பட்டுள்ளன.

ஆறு மனிதர்கள் ஒருவருடன் ஒருவர் கைகோர்த்து நிற்கும் நிலையில் உள்ள ஓவியமும் காணப்படுகின்றது. சில ஓவியங்கள் மிகவும் மங்கிய நிலையில் உள்ளன.

## செத்தவரை ஓவியங்கள்

வேட்டவலத்திலிருந்து சுமார் 3 கி. மீட்டர் தொலைவில் செத்தவரை


என்னும் சிறு கிராமம் அமைந்துள்ளது. இங்குள்ள மலையின் இயற்கைக் குகையில் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. இவை கீழ்வாலை ஓவியங்கள் போன்றே செங்காவி வண்ணத்தில் தீட்டப்பட்டுள்ளன. ஆனால் சில உருவங்கள் வெளிக்கோடுகள் செங்காவி வண்ணத்திலும் உட்புறம் வெள்ளை வண்ணத்திலும் தீட்டப்பட்டுள்ளன. அழகிய மான், நீண்ட கோல் முதலியனவும் தீட்டப்பட்டுள்ளன, அதன் கீழ் தீச்சுவாலையும் காட்டப்பட்டுள்ளது. இது மானின் இறைச்சியைக் கோலில் மாட்டித் தீயில் வாட்டுவதுபோல் காணப்படுகிறது. மேலும் எருதுகள், காட்டுப்பன்றி, மீன் மற்றும் சில குறியீடுகளும் காணப்படுகின்றன. மனிதனின் கை போன்ற ஓவியங்கள் பல இங்கேயுள்ளன.

### குளிர்சுனை, புறாக்கல் ஓவியங்கள்

இவ்வோவியங்கள் கீழ்வாலைக்குச் செல்லும் வழியில் சுமார் 2 கி.மீ. தொலைவில் உள்ளது. இவ்வோவியங்கள் தெளிவாக இல்லை.

### ஆலம்பாடி ஓவியங்கள்

இக்கிராமம் திருக்கோயிலூரிலிருந்து சுமார் 18 கி.மீ. தொலைவில் உள்ளது. இங்கு கண்டுபிடிக்கப்பட்ட ஓவியங்களில் மரங்களிடையே தோன்றுவதுபோல் வரையப்பட்ட மான், எருது, மீன், மயில், காட்டுப்பன்றி, காண்டாமிருகம் ஆகியவற்றுடன் மனிதனின் முகமூடி போன்று கோடுகளால் வரையப்பட்ட ஓவியமும் முக்கியமானவை. மிருகங்களின் தோலை உரித்து உலர்த்துவது போன்ற ஓவியங்கள் பல தீட்டப்பட்டுள்ளன.



ஆலம்பாடி-பாறை ஓவியம்

### கொல்லூர் ஓவியங்கள்

இவ்வூர், திருக்கோயிலூருக்கு அருகில் உள்ள அரகண்ட நல்லூர் என்ற இடத்திலிருந்து சுமார் 2 கி.மீ. தொலைவில் உள்ளது, இங்குள்ள ஓவியங்கள் மிகவும் மங்கித் தெளிவற்றுக் காணப்படுகின்றன.

**பாடியந்தல் ஓவியங்கள்**

இவ்வூர், திருக்கோயிலூரிலிருந்து வேட்டவலம் செல்லும் வழியில் உள்ளது. இங்கு கண்டுபிடிக்கப்பட்ட ஓவியங்களில் குதிரைமீது அமர்ந்துள்ள மனிதனும், மானும், குறிப்பிடத்தக்கவை. மற்றவை மங்கிய நிலையில் காணப் படுகின்றன.

**வேட்டைக்காரன் மலை**

கோயம்புத்தூரிலிருந்து சுமார் 25 கி.மீ. தொலைவில் உள்ள வெள் ளெருக்கன் பாளையம் என்னும் ஊர் அருகில் வேட்டைக்காரன் மலை உள்ளது. இம்மலையில் காணப்படும் ஓவியங்கள் வெள்ளை நிறத்தில் தீட்டப்பட்டுள்ளன. குதிரைமீது அமர்ந்த நிலையில் உள்ள வீரன், கைகளைக்கோர்த்த நிலையில் வரிசையாக நிற்கும் மனிதர்கள், யானையின்மீது அமர்ந்துள்ள மற்றொரு மனிதன் போன்றவை குறிப்பிடத்தக்கவை.

---

# புதிய கண்டுபிடிப்பு

இத்துறை தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரிக்கு அருகே உள்ள மகாராஜக்கடை, அங்கணாநாச்சிமலையில் வரலாற்றுக் காலத்திற்கு முந்தைய ஓவியங்களையும், தமிழ் எழுத்தில் தீட்டப்பட்ட தமிழிக் (பிராமி) கல்வெட்டு ஒன்றையும் கண்டுபிடித்துள்ளது.

ஓவியங்கள் மலையின் அடிவாரப் பகுதியில் உள்ள பெருங்கற்காலக் கல் திட்டைகளின் பலகைக் கற்களில் உட்புறப் பகுதியில் வெள்ளை வண்ணத்தில் தீட்டப்பட்டுள்ளன. இவ்வோவியங்களில், குதிரையில் சவாரி செய்யும் வீரர், வில் லேந்திய வீரர், இடுப்பில் குறுவாள் ஏந்திய வீரர் ஆகிய உருவங்களும், காட்டுக் கோழியின் உருவமும் மிகவும்அழகு வாய்ந்தவைகளாகக் காணப்படுகின்றன.

மற்றொரு உருவத்தினைச் சுற்றித் தலைக்கு மேலாக வளைந்த ஒரு வட்டம் காணப்படுகிறது. இவ்வட்டத்தில் இருந்து சிறுசிறு கோடுகள் சுற்றிலும் செல்கின்றன. இவற்றைப் பார்க்கையில் தீச்சுடர்களுடன் கூடிய பிரபையின் உள்ளே இருக்கும் கடவுள் உருவம் போன்று காணப்படுகிறது இவ் ஓவியங்கள் இன்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முந்தையது என்று கருதலாம்.

தமிழிக் கல்வெட்டு மலையின் உச்சியில் இயற்கையாக அமைந்த குகையில் வெள்ளை வண்ணத்தில் தீட்டப்பட்டுள்ளது. சிலரால் தானம் அளிக் கப்பெற்ற செய்தியைத் தெரிவிப்பதாகத் தோன்றுகிறது. இதன் காலமும் மலையின் அடிவாரத்தில் டால்மனில் காணப்பெறும் ஓவியங்களின் காலமும் ஒன்றாக இருக்கலாமோ என்று எண்ணத் தோன்றுகிறது. ஆய்ந்து முடிவு எடுத்தல் வேண்டும்.

–கிருஷ்ணமூர்த்தி

---

# இடையார்ப்பாக்கம்

கி. ஸ்ரீதரன், எம்.ஏ.,
பதிவு அலுவலர்
தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை-28

இடையார்ப் பாக்கம் என்ற ஊர் சென்னையிலிருந்து 55 கி.மீ. தொலைவில் ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தில் அமைந்துள்ளது. அங்கு வைகுண்டப் பெருமாள் கோயில் என அழைக்கப்படும் பெருமாள் கோயிலுக்கு செல்லும் வழியில் ஒரு சிறு வாய்க்கால் கரையில் கை, கால்கள் சிதைந்த நிலையில் ஒன்பது கற்சிற்பங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அவை: சிவலிங்கம், நந்தி, விஷ்ணு, துர்க்கை, பிரம்மா, தட்சிணாமூர்த்தி, பைரவர் அம்மன், சூரியன் ஆகியன. இவை 12, 13-ம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. இங்கு ஒரு கோயில் இருந்து அழிந்திருக்கலாம். இவ்வூர் மக்கள் இந்த இடத்தைச் சிவன் கோயில் மேடு என்று அழைக்கின்றனர். இங்கு பிள்ளையார் சிற்பத்திற்காகத் தோண்டியதாகவும்; அப்பொழுது இந்த சிற்பங்கள் அகப்பட்டதாகவும் பிறகு இதே இடத்தில் அனைத்துச் சிற்பங்களையும் வைத்துவிட்டதாகவும் ஊரார் கூறினர். இச்சிற்பங்களுக்கு அருகில் வயலில் சப்தமாதர் கோயில் ஒன்று உள்ளது. இதைக் கன்னிமார் கோயில் என அழைக்கின்றனர். ஒவ்வொரு உருவத்தின் கீழேயும் அவற்றின் வாகனம் செதுக்கப்பட்டுள்ளது. இவை கி.பி. 10,11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகத் தெரிகிறது.



சிவன் கோயில்

**ஏரிக் கோயில்**

இவ்வூருக்கு மேற்கே ஏரிக்கரையில் பாழடைந்த ஒரு கோயில் உள்ளது. கருவறை. கஜபிரஷ்ட (தூங்கானை மாடம்) வடிவத்தில், சிறு அர்த்த

மண்டபத்துடன் காணப்படுகிறது. சிவலிங்கம் நல்ல நிலையில் உள்ளது. ஆவுடையார் பகுதியின் வலது பக்கம் மட்டும் சற்று உடைந்துள்ளது.

## விமான அமைப்பு

இரு நிலை விமானம், கஜபிருஷ்ட வடிவில் அமைந்துள்ளது. இரண்டு நிலைக்கு மேலே பெரிய செங்கற்களால் கட்டப்பட்டுள்ளது. உச்சிப் பகுதியில் மரங்கள் முளைத்திருப்பதால் அப்பகுதி சிதைந்து காணப்படுகிறது.

கோயிலின் வெளிப்புற மாடங்களில் துர்க்கை, பிரம்மா, தட்சிணா மூர்த்தி, பிள்ளையார் ஆகிய தெய்வத் திருவுருவங்கள் உள்ளன. கருவறையின் பின்புற கோஷ்டத்தில் உருவம் காணப்படவில்லை.

## கல்வெட்டுக்கள்

இக்கோயிலில் முதற் குலோத்துங்கன் காலத்தைச் சேர்ந்த மூன்று கல்வெட்டுக்களும், இரண்டாம் இராஜாதிராஜன் கல்வெட்டு ஒன்றும் உள்ளது இக்கோயில் முதல் குலோத்துங்கன் காலத்தைச் சார்ந்ததாகத் தெரிகிறது. (கி.பி. 1070-1120)

இக்கோயிலைக் கட்டியவன் முதலாம் குலோத்துங்கன் காலத்தில் வாழ்ந்த சந்திரசேகரன் ரவி என்ற சோழேந்திர சிம்ம ஆசாரியாவான். இந்த கோயில் கொண்டிருக்கும் இறைவனுக்கு 'திருப்பாத காடுடையார்' என்பது பெயர். இப்பகுதி ஜெயங்கொண்ட சோழமண்டலத்தில் மணவிற் கோட்டத்து புரிசை நாட்டின் ஒருபகுதியாக இருந்தது. புரிசை என அழைக்கப்படும் ஊர் இவ்வூருக்கு அருகில் உள்ளது. முதலாம் குலோத்துங்க சோழனின் 38-ஆம் ஆட்சி ஆண்டில் திருப்பாத காடுடைய மகாதேவருக்கு விளக்கெரிக்க 95 ஆடுகள் தானமளிக்கப்பட்டது (252 of 1910).

இரண்டாம் இராஜாதிராஜனின் 11-ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டில் இவ்வூர் 'இடையாற்றுப்பாக்கம்' எனவும், ராஜ வித்யாதர சதுர்வேதிமங்கலம் எனவும் அழைக்கப்படுகிறது (253 of 1910). இக்கோயிலுக்கு அளிக்கப்பட்ட நிலத்தை ஊரார் எடுத்துக்கொண்டு, கோயில் நிர்வாகத்தினரின் வேண்டுகோள்படி நிலத்துக்குப் பதிலாக ஆடுகளைக் கோயிலுக்கு அளித்த செய்தியை இக்கல்வெட்டு கூறுகிறது. ஏன் இவ்வாறு ஊரார் செய்தனர் எனில், முன்னர் கோயிலுக்கு அளிக்கப்பட்ட நிலம் ஊரின் ஒரு மூலையில் அமைந்துவிட்டது. இதற்கு நீர்பாசன வசதி அளிக்க இயலவில்லை. எனவே நிலத்திற்கு பதிலாக ஆடுகள் தானமாக அளிக்கப்பட்டன.

வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இக்கோயிலைத் தமிழ்நாடு அரசுத் தொல்பொருள் ஆய்வுத்துறை பாதுகாக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

★

# துறையின் சிறப்பு நிகழ்ச்சிகள்

### தக்கை இராமாயணம்-நூல் வெளியீட்டு விழா

இத்துறையில் தக்கை இராமாயணம் என்னும் நூல் அச்சிடப்பட்டது. யுத்தகாண்டம் தவிர முதல் ஐந்து காண்டங்களும் இரு தொகுதிகளாக வெளி வந்துள்ளன. இந்நூலைத் திரு. கு. அருணாசலக்கவுண்டர் அவர்கள் பதிப்பித் துள்ளார். இந்நூல் 29-5-'83 அன்று திருச்செங்கோட்டில் வெளியிடப் பட்டது. தவத்திரு குன்றக்குடி அடிகளார் இந்நூலை வெளியிட, மாண்புமிகு சி. பொன்னையன், சட்டத்துறை அமைச்சர், திருவாளர்கள் டி. எம். காளியண்ண கவுண்டர், சிலம்பொலி செல்லப்பன், ஆகியோர் இந்நூலைப் பதிப்பித்த பதிப் பாசிரியரையும், பதிப்பித்துக் கொடுத்த துறையையும் பாராட்டிப் பேசினர். இயக்குநர் (பொறுப்பு) திரு. நடன. காசிநாதன் அவர்கள் நூல் அறிமுக உரையாற்றினார்.

### கோடைக்காலக் கல்வெட்டுப்பயிற்சி

1983 ஜூன் திங்கள் 6-ஆம் நாள் முதல் தென்னார்க்காடு மாவட்டம், திருக்கோயிலூர், திருநெல்வேலி மாவட்டம், பாபநாசம் ஆகிய மையங்களில் பள்ளி, கல்லூரி ஆசிரியர்களுக்குக் கோடைகாலக் கல்வெட்டுப் பயிற்சி வகுப்புக்கள் நடைபெற்றன. இதன் நிறைவுவிழா ஜூன் 25-ஆம் நாள் காலை 10 மணியளவில் திருச்சி தில்லை நகர், குறிஞ்சி திருமண மண்டபத்தில் நடை பெற்றது. திருமிகு கே. சௌந்தரராசன், பி.ஏ., எம்.எல்.ஏ. அவர்கள் விழா விற்குத் தலைமையேற்றுப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்குச் சான்றிதழ் வழங்கி னார்கள். டாக்டர் அ. சிவக்கண்ணு மற்றும் டாக்டர் இரா. கலைக்கோவன் ஆகியோர் பயிற்சி பெற்றோரைப் பாராட்டிப் பேசினர்.

### பூலாங்குறிச்சிக் கல்வெட்டு - திங்கள் பொழிவு

இத்துறையில் உள்ளோரின் ஆராய்ச்சித்திறனை நெறிப்படுத்தும் முறை யில் திங்கள்தோறும் ஆராய்ச்சிச சொற்பொழிவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு முதல் சொற்பொழிவு 12-9-83 திங்கட்கிழமை அன்று மாலை 5-30 மணியளவில் இவ்வலுவலக வளாகத்தில் 'Poolankurucci Inscription-A relook' என்னும் தலைப்பில் திரு. நடன. காசிநாதன், இயக்குநர் (பொறுப்பு) அவர்கள் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார்கள். 1979-ல் கண்டு பிடிக்கப்பட்ட இக் கல்வெட்டைத் தற்பொழுது தான் முழுமையாகப் படிக்க முடிந்தது. இக் கல்வெட்டு தமிழக வரலாற்றுக்குப் பல புதிய செய்திகளை அளித்துள்ளதாக இயக்குநர் (பொறுப்பு) விரித்துரைத்தார். தினமலர் ஆசிரியர் திரு இரா. கிருஷ்ணமூர்த்தியும், சென்னைப் பல்கலைக் கழக தொல்பொருள் ஆய்வுத் துறை விரிவுரையாளர் டாக்டர். பி. சண்முகமும் கல்வெட்டைக் கண்டுபிடித்த

தொல்பொருள் ஆய்வுத்துறையையும், அதன் அலுவலர்களையும் பாராட்டிப் பேசினார்கள்.

### கங்கைகொண்ட சோழபுரம் அகழ்வாய்வு - திங்கள் பொழிவு

19-10-83 புதன்கிழமை மாலை 5-30 மணிக்கு இவ்வலுவலக வளாகத்தில் திரு. கி. ஸ்ரீதரன், எம்.ஏ. பதிவு அலுவலர், சென்னை, அவர்கள் 'கங்கைகொண்ட சோழபுரம் அகழ்வாய்வு' என்னும் தலைப்பில் ஆராய்ச்சிச் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

### முக்கண் உடையார் - திங்கள் பொழிவு

23-11-83 புதன்கிழமை அன்று மாலை 5-30 மணி அளவில் இவ்வலுவலக வளாகத்தில் 'முக்கண் உடையார்' என்னும் தலைப்பில் திருமதி. நா. மார்க்சீய காந்தி, எம்.ஏ. கல்வெட்டாய்வாளர், சென்னை, அவர்கள் ஆராய்ச்சிச் சொற்பொழிவு நிகழ்த்தினார். இராசேந்திரசோழன்-I என்னும் தெலுங்குச் சோழனின் வரலாற்றையும், அவன் வழிவந்தோர் பற்றிய செய்திகளையும் தொகுத்துக் கூறினார்.

### தொல்லியல் கருத்தரங்கு - நூல் வெளியீட்டு விழா

இத்துறையின் இரண்டாவது மாவட்ட வரலாற்றுக் கருத்தரங்கு 1982 ஆகஸ்ட் 24, 25 ஆகிய இரண்டு நாட்களில் திருச்சி குறிஞ்சி கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது.

இவ்வாய்வுக் கருத்தரங்கில் 54 ஆய்வாளர்கள் கலந்து கொண்டு தங்கள் ஆய்வுப் படைப்புக்களை வழங்கினர். இதில் 24 கட்டுரைகளைத் தொகுத்து 'தொல்லியல் கருத்தரங்கு' என்னும் தலைப்பில் இத்துறையால் வெளியிடப் பட்டது. இந் நூல் வெளியீட்டு விழா 6-12-83 செவ்வாய்க்கிழமை மாலை 6 மணி அளவில் திருச்சி, தில்லை நகர் குறிஞ்சி திருமண மண்டபத்தில் நடை பெற்றது. மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் இந்நூலை வெளியிட்டு அரியதொரு சொற்பொழிவு ஆற்றினார்கள்.

### கல்வெட்டுப் பயிற்சி

1983 டிசம்பர் திங்களில் சேலம், மயிலாடுதுறை, காஞ்சீபுரம் ஆகிய மையங்களில் பள்ளி, கல்லூரி ஆசிரியர்களுக்குக் கல்வெட்டுப் பயிற்சி வகுப்புகள் நடத்தப் பெற்றன. இதன் நிறைவுவிழா ஜனவரி 12-ஆம் நாள் வியாழக்கிழமை மாலை 3 மணி அளவில் சென்னை எழும்பூர் அரசு அருங் காட்சியகக் கலை அரங்கில் நடைபெற்றது. மாண்புகு சட்டமன்ற மேலவைத் தலைவர் டாக்டர். ம. பொ. சிவஞானம் அவர்கள் தலைமையேற்க, மாண்புமிகு கூட்டுறவுத்துறை மற்றும் சட்டத்துறை அமைச்சர் திருமிகு சி. பொன்னையன் அவர்கள் பயிற்சி பெற்றோருக்குச் சான்றிதழ் வழங்கியருளினார்கள். அறிவியல் மற்றும் கல்வித்துறைச் செயலாளர் திருமிகு. தி. து. சுந்தர்ராஜ் ஐ.ஏ.எஸ். அவர்கள் பயிற்சிபெற்ற ஆசிரியர்களையும் தொழில் நுணுக்கத் பயிற்சி அளித்த தொல்பொருள் ஆய்வுத்துறையையும் பாராட்டிப் பேசினார்கள்.

**கம்பெனி ஆட்சியில் தில்லை விவசாயிகள் - திங்கள் பொழிவு**

*7-2-84 செவ்வாய்க் கிழமை மாலை 5-30 மணிக்கு இவ்வலுவலக வளாகத்தில் 'கம்பெனி ஆட்சியில் தில்லை விவசாயிகள்' என்னும் தலைப்பில், திரு அ. இராசேந்திரன், கல்வெட்டாய்வாளர், சென்னை, அவர்கள் ஆராய்ச்சிச் சொற்பொழிவு நிகழ்த்தினார்.*

**மதகு, மடை, தூம்பு, குமிழி - திங்கள் பொழிவு**

*31-3-84 சனிக்கிழமை மாலை 5-30 மணிக்கு இவ்வலுவலக வளாகத்தில் 'மதகு, மடை, தூம்பு, குமிழி' என்னும் தலைப்பில் திரு. சு. இராசகோபால் கல்வெட்டாய்வாளர், மதுரை, அவர்கள் ஆராய்ச்சிச் சொற்பொழிவு நிகழ்த்தினார்.*

—அ. இராசேந்திரன்

---

# இராசராசன் விழா

*சோழப் பெருமன்னன் முதலாம் இராசராசனின் ஆயிரமாவது முடிசூட்டு நாள் விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடத் தமிழ்நாடு அரசு, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் பொறுப்பு ஆலோசனைக் குழுவை அமைத்து செயலாற்றி வருகிறது. வரும் ஜூலைத் திங்கள் 24-ஆம் நாள் முதல் 28-ஆம் நாள் முடிய விழா நடத்தப்பட முடிவெடுக்கப்பட்டுள்ளது. விழாவைச் சிறப்புற நடத்தத் தேவையான ஆக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

# திருமலை மன்னர் விழா

*மாமன்னர் திருமலை மன்னரின் 400-வது பிறந்தநாள் விழாவை இவ்வாண்டு சீரும் சிறப்போடும் நடத்தத் தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது. தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களைப் புரவலராகவும், மாண்புமிகு முனுஆதி, வேளாண்மை உயர்மட்டக் குழுத்தலைவர் அவர்களைத் தலைவராகவும் கொண்ட செயற்குழு மற்றும் பொதுக்குழு அமைக்கப்பெற்று பணிகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

---

## துறையின் அண்மைக்கால வெளியீடுகள்

1. தக்கை இராமாயணம் - தொகுதி: I — கு. அருணாசலக்கவுண்டர்
2. தக்கை இராமாயணம் - தொகுதி: II — கு. அருணாசலக்கவுண்டர்
3. தொல்லியல் கருத்தரங்கு — அ. இராசேந்திரன்
4. தமிழ் இசைக்கொத்து — ஆர். வசந்தகல்யாணி
5. Studies in Ancient Townships of Pudukkottai — R. Thirumalai

---

தமிழ்நாடு அரசுத் தொல்பொருள் ஆய்வுத்துறைக்காக டி துறையின் அச்சகத்தில் இயக்குநர் (பொறுப்பு) திரு. நடன. காசிநாதன் எம்.ஏ., அவர்களை ஆசிரியராகக் கொண்டு கல்வெட்டு ஆய்வாளர் திரு. அ. இராசேந்திரன் அவர்களால் வெளியிடப்படுகிறது.